பாரதமணி

சர்வஜித்துஸு மார்கழிமீ

DECEMBER 1947

BHARATA MANI

Editor

K.S.VENKATARAMANI

4

அணா

இப்பொழுது தான் என் சட்டைகள் உண்மையாகவே வெளுப்பாகவும் சுத்தமாகவும் இருக்கின்றன!
ஆம் — அது நான் ஸன்லைட் சோப் உபயோகிக்க ஆரம்பித்திருப்பதனால் தான்!
ஸன்லைட்டால் சுத்தம் செய்யப்பட்ட ஆடைகள் எப்பொழுதும் முன் இருந்ததை விட அதிகச் சுத்தமாகவும் வெண்மையாகவும் காண்கின்றன. ஸன்லைட்டின் தாராளமான நுரை ஒவ்வொரு இழைகளிடையேயும் புகுந்து அடித்துத் துவைக்காமலே—ஜாஸ்தி அழுக்குப்படிந்த பாகங்களிலிருந்துகூட—மலினங்களைப் பூராவும் சுலபமாக அகற்றுகிறது. இச்சோப் மகிழ்ச்சிதரும் புதுமையையும் மணத்தையும் துணிகளுக்குக் கொடுக்கிறது. மேலும் உங்கள் கைகளுக்கு நன்மையளிப்பதையும் காண்பீர்கள்.
SUNLIGHT SOAP
ஸன்லைட் சோப்
S. 88-23 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

மாத வெளியீடு

ஆசிரியர் :
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம்:
34, அலர்மேல்மங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை, 4.

வருட சந்தா ரூபா 3

தனிப் பிரதி அணா 4

மலை 18 | **DECEMBER** *1947* : சர்வஜித்து௵ மார்கழி௴ | முத்து 6

பொருளடக்கம்

விஷயம்		பக்கம்
போகிற போக்கில்—கா. சி. வேங்கடரமணி	...	3
வாழ்க ராஜாஜி—பி. ஸ்ரீ.	...	7
உலகப் போக்கும் நாட்டு நடப்பும்—கெ. கே.	...	9
காரைக்கால் அம்மையார்—தமிழ்த் தொண்டர்	...	14
அக்பரின் நிராசை—சொ. மு. ஜகந்நாதன்	...	20
மாண்டிஸோரி - ஒரு புதிய உலகம்—அ. இ.	...	23
முதற் பரிசு—' கோபால ராஜம் '	...	26
சோம்பேறி முத்தன்—' ராஜா '	...	28
ஆண்டாள் (கதையும் உட்பொருளும்)—கெ. கே.	...	29
மாதர் மகாநாடு—	...	35
குமாரகுருபர சுவாமிகள்—	...	36
மாய மீன்—	...	39

"பாரத மணி"யில் வெளியாகும் கட்டுரைகள் கதைகளில் வெளிவரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

அழகுப் பொக்கிஷம்

அழகு தானே கலை! அதைத்தான் மைசூர் சந்தன சோப் உங்களுக்கு அளிக்கிறது. நின்று மணக்கும் அதன் துல்லிய மணமும் மேனியை அழகு படுத்திக் காப்பாற்றும் அதன் குணமும் ஒப்பு உயர்வற்றவை.

மைசூர் சந்தன சோப்

கவர்ன்மெண்ட் சோப் பாக்டரி
பெங்களூர்

இந்தமாதம் 'போகிற போக்கில்' எதைப்பற்றி எழுதுவது என்ற கவலையில் ஆழ்ந்தேன். வாசகர்களைக் கவரும் வழியை யல்லவோ மாதா மாதம் தேட வேண்டியிருக்கிறது! வாசகர்கள் மனமோ மேல்காற்றைவிட வேகமாய்ச் சருகுகளையும், மண்ணையும் கல்லையும்கூட அள்ளிக் கொண்டு நவீன முறையில் ஓடிக்கொண்டிருக்கிறது.

பென்சிலைக் கூராகச் சீவி, கையில் அகப்பட்ட சழிவுத்தாளை எடுத்துக் கொண்டு வாசல் திண்ணையில் போய் உட்கார்ந்தேன். அழகாய்ப் பெருக்கி மெழுகிக் கோலம் போட்டிருந்தது. அடுத்த வீட்டுக் குப்பைகூட எங்கள் வீட்டில் பெருக்கித் தள்ளப்பட வில்லை! கார்த்திகை ஞாயிற்றுக்கிழமை—கடைசி ஞாயிறு—ஒரு புண்ணிய நாள்.

என் ஊருக்கு இரண்டு மைலில் 'ரத்ன சாயாவனம்' என்ற பெயர் கொண்ட ஒரு பழைமையான க்ஷேத்திர மிருக்கிறது. அதில் ஒரு புண்ணிய தீர்த்தம்—கோவிற் குளம். கார்த்திகை ஞாயிற்றுக் கிழமையன்று அதிகாலையில் அதில் நீராடினால் கங்கையில் நீராடிய பலன் கிடைக்குமாம். ரயில் சார்ஜ் ரூபாய் இருபத்தைந்து வீண் செலவு மிச்சம்—ஐந்து வீசைக் காப்பிக்கொட்டை வாங்கலாம்!

அந்தப் புண்ணிய தீர்த்தத்தில் நீராடி விட்டு இன்று அதிகாலையில் வரிசை வரிசையாய்ப் பெண்களும் ஆண்களும் ஈரஉடையுடன் நிர்மலராய், பக்தியுடன் குளிரில் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். நானோ காப்பி சாப்பிட்டு விட்டு 'கமகம' வென்று 'ஸ்வெட்டர்' போட்டுக் கொண்டு திண்ணையில் பேப்பரும் பென்ஸிலுமாய் உட்கார்ந்து கொண்டிருந்தேன். ஈர ஆடைகளோடு வரும் அவர்களைக் கண்டு எனக்குத்தான் குளிர ஆரம்பித்து விட்டது! இருந்தாலும், நான் ஆங்கிலப் படிப்புப் படித்து நமது நாட்டின் ஆசார அனுஷ்டானங்களைப் பின் பற்றாமல் இருக்கிறேனே என்று நினைத்து, அவர்களைப் பார்க்கக் கொஞ்சம் வெட்கமாயிருந்தது. எனினும் அந்த ஆங்கிலப் படிப்பின் அறிவினாலேயே என்னைத் திடப்படுத்திக் கொண்டேன்.

நமக்குச் சுயராஜ்யம் கிடைத்து 'நேரு' சர்க்காரை அடைந்த பின் கூட இந்தப் பைத்தியம் நம்மை விடவில்லையா? பாசித் தண்ணீரில் போய்க் கால் சறுக்கி வழுக்கி விழுந்து, தேங்கிய குளத்தில் முங்கி முழுகும் புண்ணியம் என்ன புண்ணியம்! காந்தி, ராஜாஜி இவர்கள் முப்பது ஆண்டு பாடுபட்டாலும் இந்துக்களின் மூடபக்தியையும் மனோபாவத்தையும் மாற்ற முடியாது போலிருக்கிறதே! இந்தச் சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் போதே, இவைகளை விட்டு விலகி நிற்கும் எனக்கு உள்ளத்தில் ஏதோ கொஞ்சம் வெட்கம் பெருகிக் கொண்டிருந்தது. இன்னும் 'கங்காஸ்நானம்' செய்துகொண்டு வரும் வரிசை வந்து கொண்டேயிருந்தது. சட்டைகளையணிந்துகொண்டு 'குடுகுடுப்பாண்டி' போல் திண்ணையில் அநாசாரமாய் இனிமேல் உட்கார்ந்திருக்க வெட்கப் பட்டு உடனே எழுந்தேன். ஆங்கிலப் படிப்பாலும் காப்பிக் குடியாலும் ஊட்டப் பெற்ற மனோ தைரிய லட்சுமியும் என்னைக் கைவிட்டாள்!

‘போகிற போக்கில்’ எழுதத் திண்ணை சரியான இடமில்லை என்று தீர்மானித்து, கொல்லை மாட்டுக் கொட்டிலுக்கே போய் விடுவோம் என்று கிளம்பி விட்டேன். பசுக்கள் இருந்த இடமும் புண்ணிய ஸ்தலம் தானே !

‘மாட்டுக் கொட்டகை’ என்று பெயர் தான். ஒரு காலத்தில்—என் தாத்தா நாளில்—அவ்விடத்திலே பத்துப் பசுக்கள் கட்டப் பெற்றனவாம். பெரிய வைக்கோல் போராம். அகத்தில் ஏராளமாகப் பாலும் தயிரும் வெண்ணெயும் மிதியலாடுமோம். பாட்டி என்னிடம் சொல்லியிருக்கிறாள். அவை எங்கே ? பசுக்களை யெல்லாம் விற்று என்னைப் படிக்க வைத்தாகி விட்டது. பாலெல்லாம், சட்டையாகவும் புஸ்தகமாகவும், காப்பிக் கிளப்பாகவும் மாறி விட்டது. மஹா யுத்தத்திற்குப் பிறகு பசுமாடே என் கிராமத்தில் கிடையாது—ஹிட்லரும் சர்ச்சிலும் கொண்டுபோய் விட்டார்கள் ! கொஞ்சம் எருமை உண்டு. அதின் பாலும், கள்ளுக்கடை நிறுத்திய பிறகு ‘டீ’ க்கடைக்குப் போய்விடுகிறது. தயிர், மோர், பால்—ஏன், வெண்ணிறமான ஒருவிதக் குடியும் கிடையாது ! எல்லாம் அத்வைத மயமாய்த் தேத் தண்ணீரில் கலந்துவிட்டது!

பத்து ஆண்டுகளில் நிச்சயமாகப் பூபாரம் குறைந்துவிடும். ரேஷன் அரிசியும் டீ, காப்பிக் கடைகளும் சேர்ந்து ஜன நெருக்கடியால் ஏற்படும் அரசியல்-சிக்கல்களைத் தீர்த்துவிடும். மந்திரிசபைக்குக் கொண்டாட்டம், வேலையே இராது; கிராமங்கள் அமைதிபெற்று முன்னேற்றம் அடையும்!

என் மாட்டுக்கொட்டிலி லிருந்து இவ்வளவு வேதாந்தம் பெருகுமென்று, நான் நுழையும்போது எண்ணவில்லை. ஈசன் அருள் ! கார்த்திகை ஞாயிற்றுக் கிழமை !

இப்போது என் மாட்டுக் கொட்டிலில் கொசுகூடக் கிடையாது. பல்லிகள் தான் நித்திய வாஸம். பாம்புக்குப் பயந்த சில தவளைகளும் குடியேறியுள்ளன. பொறுக்கிப் போட்ட ‘கூறும் பானை’ அடிமட்டை, தேங்காய்மட்டை, சுள்ளிவிறகு இவையும் உண்டு. கிராமத்தில் விறகுஏது? மரங்கள் வைத்துப் பயிராக்கும் பழக்கமே போய்விட்டது. அப்படி யாராவது பாடுபட்டாலும் பயனில்லை- ஏராளமான ஆடுகள்! ஆம், நகரவாசிகளின் உணவிற்காகத் தோட்டத்தை அழித்து ஆட்டைவளர்த்து, காப்பிக்கு வேண்டிய காசுக்காக விற்றுவிடுகிறார்கள். எனவே விறகுப் பஞ்சம். தொலையட்டும்—இது ஏன் என்கவலை ? நான் கிராமவாசியா ?

மாட்டுக் கொட்டகையில் ஒரு அங்கணத்தைத் தட்டிச் சுத்தம் செய்துவிட்டு, எழுத உட்கார்ந்தேன். எதைப்பற்றி எழுதலாம் ? கவலை திரும்பியது. கிராமத்தைப் பற்றியும், கார்த்திகை ஞாயிற்றுக்கிழமையைப் பற்றியும் எழுதினால் வாசகர்கள் கோபித்துக் கொள்வார்களே ! —சிவன் இருந்தால் கல்லை எடுத்தும் அடிப்பார்கள் ! அரசியலைப்பற்றி ஒரு வரியாவது வேண்டாமா? உப்பில்லாச் சோற்றை யார் தொடுவர்—அதுவும் காசுகொடுத்த சோற்றை ? தினசரி மூன்று காலம் தலைபங்கம் எழுதும் அரசியல் வீரர்களை ஏன் கோயிலில் வைத்துக் கும்பிடக்கூடாது ?

வடஇந்தியாவில் கொஞ்சகாலம் தங்கியதன் பயனாக, ‘பாக்கிஸ்தான் பிசாசு’ என்னைப் பிடித்துக் கொண்டுவிட்டது. என் மூளையைவிட்டு அது விலகுவதேயில்லை. குடிகொண்டு கொட்டிக் கொண்டேயிருக்கிறது. ஆகையால் மறுபடியும் பாக்கிஸ்தானைப்பற்றி எழுதலாம் என்று தீர்மானித்தேன். தீர்மானித்தவுடன், பாக்கிஸ்தானைப்பற்றி எழுதுவானேன் ? அதற்கு உயிரும் உருவமும் அளித்த ராஜாஜியைப்பற்றி எழுதினால் போதாதா ? அவரும் இப்போது வங்காளக் கவர்னராக இருக்கிறார். எழுபதாவது ஆண்டுவிழாக் கொண்டாட்டம் முதல் முதலாகச் சிறப்புடன் சென்னையில் நடைபெறுகிறது. அவரைக் கல்லை எடுத்து அடித்தவர்கள் கூட இப்போது பூமாலை கையில் ஏந்தி அவர் படத்தின் முன் பக்தியுடன் நிற்கிறார்கள். “நீங்கள் எண்ணியபடி எனக்கு இன்னும் எழுபது வயது ஆகவில்லை. இருந்தாலும் எதற்

கும் நான் தயார்" என்று கூறி ராஜாஜி கல்கத்தாவிலிருந்து ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். எந்தக் கொண்டாட்டத்தையும் களிப்பையும் புன்சிரிப்புடன் பேனாக்கத்தியால் - எழுத்தாணியால் கிண்டிக் கிளறிப்பார்க்கக் கூடிய கூரிய தன்மையும் மனோபாவமும் அவருக்கு உண்டு.

ஆகையால் ராஜாஜியைப்பற்றி எழுதுவதாகத் தீர்மானித்து மாட்டுக் கொட்டகையில் உட்கார்ந்த இடத்தை மறுபடியும் தட்டிவிட்டு உட்கார்ந்து எழுத ஆரம்பித்தேன். பேப்பரின் தலையில் பிள்ளையார்சுழி போட்டேனோ இல்லையோ, கொட்டகையின் கூரையிலிருந்து திடீர் என்று ஒரு தேள் பிள்ளையார் சுழியின்மேல் குறிவைத்த அம்பு போல் விழுந்தது. உளறியடித்துக் கொண்டு எழுந்திருந்து அந்தத் தேளைக் கொல்லப் பார்த்தேன். தேளோ அசையாமல் தபஸில் நிற்பதுபோல் கொடுக்கை மாத்திரம் தூக்கிகொண்டு நின்றது. சொர்க்க லோகத்திலிருந்து கேவலம் பூமியில் இறங்கினவர்கள் கொஞ்சம் பிரமிக்கத்தானே வேண்டும்! தபஸ்வியாக நிற்கும் தேளைக்கண்டு 'அதைக் கொல்லுவதா?' என்று என் அஹிம்சை என்னைக் கொட்டியது. கொல்ல மனம் வரவில்லை. ஒரு தேளைக் கொன்று என்ன லாபம் - அதுவும் நம்மைக் கொட்டாத தேளை? வர்க்கத்தையே அல்லவோ அடியோடு அழிக்கவேண்டும்? அப்படித் தேள்வர்க்கம் முழுவதும் ஒழிபட்டாலும் அதனால் இன்னும் நமக்குத் தெரியாத தீங்குகள் எவ்வளவு நேரிடுமோ?

அழகிய பாம்புத் தோல் பெல்ட்டுக்காகப் பாம்புகளைப் பிடித்துக்கொல்லும் வியாபாரம் முன்னேற்றம் அடைய, அதன் மூலம் நமக்கு உணவுப் பஞ்சம் வந்துவிடும் போலிருக்கிறது! என் ஊரில் பசுக்களோடு பாம்புகளும் ஒழிய, அதன் மூலம் எலிகளின் சுரண்டும், சூறையாடும் சாம்ராஜ்யம் வலுக்க, வயல்களில் அறுவடைச் சமயத்தில் பயிரிட்டவனுக்கு அதிக வேலையின்றிக் கதிர்களை 'எலி வெட்டு' வெட்டிப் பாதிக்குமேல் இந்தப் பஞ்சகாலத்தில் நெல் நாசமாகிறது. விவசாயப் பண்ணை எலியை ஒழிக்க மருந்து தேடி, அதைப் பிரசாரம் செய்து கொண்டிருக்கிறது. எலிகள் ஒழிந்தால் அதிலிருந்து என்ன புதுப் பூதங்கள் கிளம்புமோ தெரியவில்லை!

மானிட வாழ்வில் நம் கண்ணை நம் விரலால் தான் அடிக்கடி குத்திக் கொள்ளுகிறோம். சிருஷ்டியில் எது வேண்டும், எது வேண்டாம் என்று தீர்மானித்து வேண்டாததை அழிக்க நமக்கு என்ன உரிமை? தவிர நானும் ஒரு முறையில் காந்தி மஹானின் சிஷ்யன் தானே? அனேகமாக நாம் எல்லோரும் பேருக்காவது அப்படித்தானே? ஆகையால் அந்தத் தேளைக் கொல்லக் கூடாது என்று யோசித்து முடிவுக்கு வந்தேன். அதற்குள் அந்தத் தேளும் நான் தபஸிலிருப்பதை நுட்பமாய் அறிந்து என்னை எய்த்து விட்டு எங்கேயோ ஓடிப்போய் ஒளிந்து கொண்டு விட்டது. என் ஏமாற்றத்தை மாற்றும் பொருட்டு 'அடியே, அடியே!' என்று ஸம்ஸாரத்தைக் கூப்பிட்டேன்.

"தேளடி, தேள்! பெரும் தேள்! தவளைபோலிருக்கிறது! என் பேரில் விழுந்தது. சீக்கிரம் வா."

"சீக்கிரம் வருவானேன்? உங்களைக் கொட்டவில்லையே-கொட்டகையில்போய் 'போகிற போக்கில்' எழுதும் புத்திக்கு—தேளிருந்தால் என்னையேன் கூப்பிடுகிறீர்கள்? - உடனே நீங்களே அடிக்கலாமே! அடித்து விடுங்கள், இல்லாவிட்டால் அது சமையல்கட்டுக்கு வந்துவிடப் போகிறது—"

"தேளை வந்து பாரேன், பெரிய தேள்—எங்கேயோ ஓடிப் பதுங்கி விட்டது - சீக்கிரம் வாடி" என்று கூவினேன்.

"நான் கறி நறுக்கிக் கொண்டிருக்கிறேன். 9-30 க்குள் சாப்பிட வேண்டுமே-ஆபீசுக்குப் போகிறவர்கள்போல்! நான் தேளைப் பார்க்க வந்தால், கறி யார் நறுக்குவது?" என்று முடிவாய்ச் சொல்லிவிட்டு அவள் இடத்தைவிட்டு நகரவில்லை.

இதுவும் பெண்மணிகளின் சுபாவம் என்று வேதாந்த சிந்தனையில் நினைத்து

மறுபடியும் தேளைத் தேடிக் கண்டுபிடித்துப் பின் நாளுகவே நேரில் அதற்கு மன்னிப்புக் கொடுக்க வேண்டுமென்று எண்ணினேன். ஓடிப்போன தேளின் அருகில் அமைதியாய் உட்கார்ந்து "போகிற போக்கில்" ராஜாஜியைப்பற்றி எழுத முடியுமா ?

தவிர, ராஜாஜியைப் பற்றி, நினைத்துப் பிள்ளையார் சுழி போட்டவுடன் தேள் விழுந்ததே அது நல்ல சகுனமா, அல்லவா ? தேள் விழுவது, தேளைப்பார்ப்பது நல்ல சகுனம் என்று பெரியோர்கள் எல்லோரும் சொல்வார்களே ? அப்படியே இருக்கலாம். ராஜாஜிக்குக் கூடிய சீக்கிரத்தில் கவர்னர் ஜெனரல் பதவி மறுபடியும் 'பெர்மனன்ட்' ஆகக்கிடைக்கலாம். லார்ட் மௌண்ட் பேட்டன் நினைத்தால் தேளிப்போல் மற்றொரு புஷ்பத்திற்குத் தாவக்கூடியவர் தானே ! இப்படி நான் நினைக்கும் போது மாட்டுக் கொட்டகையில்ஒரு கௌளியும் ஈசான்யத்தில் அடித்தது. பல்லியும் தேளும் ஒன்று கூடிப் பேசும் சொல்லுக்கு நிச்சயம் பலன் உண்டு என்று நான் சொல்லிக் கொண்டே, பழைய பிள்ளையார் சுழியைப் பலப்படுத்தினேன்.

ஆனால் மனதில் சஞ்சலம் நின்று கொண்டே இருந்தது. தேளின் பேரிலே கண்ணுக இருந்தது. ஆரம்பித்த திண்ணையும் சித்திக்கவில்லை. மாட்டுக் கொட்டகையும் அம்பலத்திலிருக்கிறது. இதை விடவும் தைரியம் இல்லை. இடம் மாறினல் சம்சாரத்தின் சொல்லுக்கு இன்னும் ஆதிக்கியம் கூட ஏற்பட்டுவிடுமே !

இந்த நிலையில் நான் நிற்கும் போது 'படையாச்சி' 'படையாச்சி' என்று கூப்பிட்டுக் கொண்டு என் எழுதலை முறைப் பண்ணையாள் முத்துச் சாம்பான் வந்துசேர்ந்தான். நான் மாட்டுக் கொட்டகையில் இருப்பது அவனுக்குத் தெரியாது.

" முத்து, ஒரு தேள் என்மேல் விழுந்ததடா ? ஆனல் அது நல்ல வேளை, என்னைக் கொட்ட வில்லை. "

" யசமாங்களுக்கு மாட்டுக் கொட்டையில் என்ன வேலை ?"

" என்ன வேலையா - கோசாலையில் ? விவசாயத்தைப்பற்றியும் கிராம முன்னேற்றத்தைப் பற்றியும் ஆதிதிராவிடர்களைப்பற்றியும் பத்திரிகைகளுக்கு எழுதியனுப்ப இதுதான் தக்க இடம், யோகசாதனமான இடம் " என்று கம்பீரமான குரலில் நான் படித்த படிப்பை எல்லாம் முத்துவிடம் காட்டினேன்.

" அடேய் முத்து, ஏண்டா, இந்த மாட்டுக் கொட்டகையை இப்படி ஊழலாக வைத்து கொண்டிருக்காய்? உங்கள் வேலையெல்லாம் இப்படி ஊழல்தான் !"

" இல்லேங்க, யசமாங்க, மாட்டுக் கொட்டை எப்பொழுதும் இப்படித்தானிருக்கும். நாங்கள் என்ன பண்ணுகிறது? காதோடு கட கட என்று சிவன் போகிறது. நெல்லுக்கூலி கொடுக்க எசமானிடம் நெல்லு இல்லே—சர்க்காரில் அளந்து கொண்டு போய்விட்டாங்க—அவங்கள் பிழைக்க !—சேத்திலும் சகதியிலும் உழுது பயிரிட்டவனுக்குக் கை நெல் இல்லே. காசுதான் கூலி. காசு வைத்துக்கிட்டு என்ன செய்கிறது? கள்ளுக்கடை கூட இல்லே. பணத்துக்கு ஊரில் நாலு நாளாக 'ப்ளாக்' மார்க்கெட்டில் கூட நெல் இல்லே. பட்னியும் பசியும்தான்—" என்று முத்து விடாமல் புலம்பினுன்.

இது பெரிய கதையாயிருக்கும் போலிருக்கிறது. உணவு மந்திரி டாக்டர் ராஜனுக்கும் இந்தக் கதை வேண்டியிருக்கும். ஆற அமர இதைக் கேட்போம் என்று தீர்மானித்து, பதுங்கிய தேளிலிருந்து தொந்தரவு செய்த கொட்டகையை விட்டு விலகி வெளியில் உள்ள வேப்ப மரத்தடிக்குப் போய், முத்துவின் முழுக்கதையும் கேட்போம் என்று ஜாக்கிரதையாய்த் தரையைத் தட்டிப் பார்த்து உட்கார்ந்தேன்.

முத்துவின் வரலாற்றை அடுத்த இதழில், 'போகிற போக்கில்' தேளின் உபத்திரவம் இன்றிக் குறிக்கலாம் என்று எண்ணுகிறேன்.

காவிரிப்பூம் பட்டினம்,
14—12—47 } மணி

வாழ்க ராஜாஜி

பி. ஸ்ரீ.

சேலத்தில் ஒரு குதிரைவண்டி படு வேகமாய் ஓடிக்கொண்டிருக்கிறது. பந்தய ஓட்டம் ஓடுவதுபோல் ஓடுகிறது குதிரை. தெருவிலுள்ளவர்கள் பார்த்துப் பயந்து போனார்கள். ஆனால் வண்டி ஓட்டியவர் பயப்படவில்லை. அவர் வண்டி ஓட்டி அல்ல, எஜமானர் தான்; சாரதி வராததால் தாமே சாரத்தியம் தொடங்கிவிட்டார். 'குதிரை இருப்பு அறியும்', ஆனதால் அந்தப் பயங்கர வேகம். 'குதித்துவிடும், குதித்துவிடும்!' என்று பல கூச்சல்கள் கிளம்பின. வண்டி ஓட்டிய யஜமானரோ தமது பதவியை விடவே இல்லை. சுமார் முக்கால் மைல் தூரம் இப்படி ஓடியபின் வண்டி ஒரு நீரோடைக்கு அருகேயுள்ள பாறையில் மோத, குதிரை நிற்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. வண்டியின் யஜமானர் அமைதியாகக் கீழே குதித்தார். குதிரையை அன்போடு தட்டிக் கொடுத்தார். மறுபடியும் வண்டியை ஓட்டிக்கொண்டு வீட்டுக்குத் திரும்பி க்ஷேமமாக வந்து சேர்ந்தார்.

இப்படி வண்டியோட்டிய வைபவம் நமது அரசியல் உலகில் ஒரு பெருந்தலைவருக்கு உரியது. நேரு அல்ல, படேல் அல்ல, சுபாஷ் சந்திரபோஸும் அல்ல, தமிழகத்தின் தனிப்பெருந் தலைவரான ராஜாஜியே இக்கதாநாயகர் என்றால், நம்புவது கஷ்டம் தானே? 'விஞ்ஞானத்தாலும் வேதாந்தத்தினாலும், பழுத்த சட்ட ஞானத்தாலும் பண்பட்டு ஆழ்ந்தகன்ற நுண்ணறிவா இப்படிச் செய்தது?' என்று அதிசயிக்கத் தோன்றும்.

'காலக் குதிரையோடு போராடி அதை எதிர்த்து முறியடிக்கக் கூடும்; கலியுகத்தையும் வென்று கிருதயுக புருஷராகமுடியும்!' என்ற ஆழ்வார்களின் நம்பிக்கை ராஜாஜிக்குக் கிடையாது. ஆழ்வார்களின் பக்தர் தான், ஆழ்வார்களுக்கும் மகாத்மா காந்திக்கும், அவர்களும் வியக்க, வியாக்கியானம் செய்யும் திறமையுள்ளவர் தான். காலப் போக்கிலே போய்த் தம் அபார நுண்ணறிவால் காலத்திற்கு இசைந்த முறையில், இசைந்த அளவில் காரியசித்தி பெறவேண்டும் என்பது ராஜாஜியின் கொள்கை. அபாரமான தன்னம்பிக்கை இவருக்கு உண்டு; ஆனால் இது பக்தியின் ஆழத்திலே, உள்ளொளியின் இதயப் பிரகாசத்திலே விளைந்த தன்னம்பிக்கை யன்று. தமது அணுவைத் துளைக்கும் கூரிய நுண்ணறிவிலே நடனமாடும் தன்னம்பிக்கை தான். இத்தகைய தன்னம்பிக்கையின் கனிகளே ராஜாஜியின் அரசியல் தொண்டும் தியாகங்களும்.

காந்தியடிகளின் 'சத்தியாக்கிரக'க் குதிரை வண்டியிலும் ராஜாஜி சாரத்தியம் செய்தார். தமது மகா சாதுரிய புத்தியால் வண்டியை ஓட்டித் திருப்ப முயன்றார். 'ஜான் கில்ப்பின்' குதிரை போல் சத்தியாக்கிரகம் வட இந்தியாவிலே நடந்த காலத்திலும், ராஜாஜி தமது நுண்ணறிவால், தன்னம்பிக்கையால், மனோ தைரியத்தால் வேதாரணிய உப்புச் சத்தியாக்கிரகத்தை வெற்றி பெறச் செய்து தமிழகத்தின் கௌரவத்தைக் காப்பாற்றினர். எல்லாம் தாம் சேலத்தில் கட்டுக்கடங்காத குதிரையை ஓட்டி வண்டியைக் காப்பாற்றி மீண்ட அதிசயம்தான்!

ஆனால் இந்தச் சாரத்தியம் எப்போதும் வெற்றி தருமா ? யுத்த எதிர்ப்புக் கோஷம் செய்து சிறைப்பட்டு மீண்டதும், ராஜாஜி இதே சாரத்திய முறையில் பாக்கிஸ்தான் வண்டியையும் இஷ்டப்படி விட்டு, வெற்றியுடன் திருப்பி விடலாம் என்று நம்பினார். ஒரு 'போனி' யை ஓட்டி மீண்ட அனுபவத்தைக் கொண்டு, முஸ்லிம் லீகையும் காங்கிரஸையும் ஒரே சகடத்தில் பிணைத்து ஓட்ட முயன்றார். லீக்-குதிரை முரட்டுத் தனமாய்ப் போனாலும் அதன் போக்கிலே காங்கிரஸ்-குதிரையும் கொஞ்சம் கஷ்டப்பட்டுப் போய்ப் பார்க்கவேண்டியது தான் ; ஏதாவது பாறையில் வண்டி மோதிக் கொண்டால், பாக்கிஸ்தான் - குதிரை மீண்டும் வழிக்கு வந்துவிடும் என்று எண்ணினார்.

பாக்கிஸ்தான்-குதிரையோ ராஜாஜியின் ராஜ தந்திரத்தைக் கண்டு கனைத்தது. அது கனைப்பா, சிரிப்பா ? அந்தக் கனைப்பு உத்ஸாகப் படுத்த, 1944-ல் மகாத்மா காந்தியைத் தூண்டி ஜின்னாவைச் சந்திக்கச் செய்தார். இப்படியெல்லாம் பாக்கிஸ்தான்-குதிரைக்குக் ' கொள்ளு ' வைத்து அதை அதன் போக்கிலே விட்டதில், பாறைகளில் மோதி வண்டி தகர்ந்து போகுமோ என்ற பயமும் ஏற்பட்டது.

சரி : அந்தக் கவலையையும் அபாயத்தையும் அனர்த்தத்தையும் சிறிது மறந்து, ராஜாஜி பொதுவாக இந்தியாவுக்கும், சிறப்பாகத் தமிழ் நாட்டுக்கும் ஆற்றியிருக்கும் ஒப்பற்ற பெரும் பணியை முன்னிட்டு, இவர் நீடூழி வாழ வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன். இன்னும் பல்லாண்டுகள் தொடர்ந்து தொண்டாற்றி, பாக்கிஸ்தான் - கவலையையும் அபாயத்தையும் அனர்த்தத்தையும் நோக்கி நாடு நலம் பெற இவரும் உள்ளபடியே அகமகிழ்ச்சியும் அமைதியும் பெறவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

உலகப் போக்கும், நாட்டு நடப்பும்

உலகம் போகிற போக்கைப் பார்க்கும் போதெல்லாம், "என்ன ? இப்படியெல்லாம் தாறுமாருய்ப் போய்க்கொண்டிருக்கிறதே, நாசத்தை நோக்கியல்லவா விரைந்து கொண்டிருக்கிறது ?" என்று வருந்துவதுதான் கொஞ்ச காலமாக நமக்கெல்லாம்-பல்லாண்டுகளாக என்றே சொல்லலாம் - மனப்பழக்கமும் பேனுப் பழக்கமும் ஆகிவிட்டது. பத்திரிகையைத் திறந்தால் "இந்த அமங்களமான முன்னுரை தானே கண்ணில் படுகிறது!" என்று வாசகர்களும் வருந்த வேண்டியதாகத்தான் இருக்கிறது. ஆனல் எலிஸபெத் அரசிக்கும் எடின்பரோ பிரபுவுக்கும் நடந்த திருமணம் ஒரு மங்களமான உலகச் செய்தியாக வரவேற்கத் தக்கதல்லவா ?

இங்கிலாந்திலுள்ளவர்களுக்கு அந்தத் திருமணம் தங்கள் சொந்த வீட்டில் நடக்கும் ஒரு மங்கள காரியம் போலவே தோன்றியதாம். சில எழுத்தாளர்களின் வசனம்போல் இலேத்திருக்கும் வாழ்க்கைக்கு 'அராபியர் நிசிக்கதை' யின் சோபை ஊட்டுவதுபோல் தோன்றியதாம் ராஜபக்தி நிறைந்த உள்ளங்களிலே.

ஆங்கிலேயர்கள் எவ்வளவு பகுத்தறிவாளர்களாயினும் சில மூட பக்திகளுக்குப் பேர் போனவர்கள், அவற்றுள் ராஜபக்தியும் ஒன்று என்று பொதுவுடைமை வாதிகள் - ரஷ்ய ரகத்தைச் சேர்ந்தவர்கள் - எண்ணக்கூடும். ஆனல் ஒவ்வொரு அரசியல் முறைக்கும் பொது மக்களை ஒன்றுபட இசைவிக்கும் ஓர் உயிர்ச்சரடு அவசியமானது என்பதைத் தேர்ந்த அரசியல் ஞானிகள் உணர்ந்திருக்கிறுர்கள். ஆங்கிலச் சீமையில் ராஜபக்திதான் இத்தகைய உயிர்நாண். இது இந்தியர்களாகிய நமது மனேபாவத்திற்குப் புரியாததன்று. நம் முன்னேர் தேவபக்தியை உயிர்க்குலத்திற்கெல்லாம் ஒருயிராய்க் கருதியதுபோல், ராஜபக்தியையும் பொதுஜன சமுதாயத்தை ஒன்றுபட இணைக்கும் பொற்சரடாகக் கருதியிருந்தனர். தேவ தேவியர்க்கும் திருக்கலியாணம் கொண்டாடுவோர்கள்; அரசன் அரசியர் திருக்கலியாணங்களையும் பொது விழாவாகக் கொண்டாடியது உண்டு.

இத்தகைய ராஜபக்தியை மூடபக்தியென்று கருதும் பொதுவுடைமை வாதிகளும் ஸ்டாலின் என்ற சர்வாதிகார பீடத்தைத் திக்கு நோக்கித் தொழுவது பிரசித்தம். பொதுவுடைமைச் சமுதாயத்திற்குத் தாற்காலிகமாயாவது சர்வாதிகார பீடம் ஓர் உயிச்சரடாயிருக்கிறது. அமெரிக்க ஜனநாயகத்திற்கு இப்படிப் பொதுமக்களை இணைக்கும் ராஜபாசமோ, சர்வாதிகார பாசமோ கிடையாது. ஐரோப்பாவிலும்கூட ராஜ சிங்காதனங்கள் ஆடிக்கொண்டு தானிருக்கின்றன. சென்ற மகாயுத்தம் 'இச் சிங்காதனங்கள் நிலையாக நிற்கத் தக்கன அல்ல' என்று மெய்ப்பித்துவிட்டது. யுத்தப் பிற்காலக் குழப்பமோ அரசியல்-பூகம்பம்போல் சிங்காதனங்களைத் தத்தளிக்கச் செய்துவிட்டன. விஞ்ஞான வளர்ச்சியோ 'ராஜபக்தியும் அஞ்ஞானம் தான் !' என்று சாமானிய மக்களையும் உணரச் செய்துவிட்டது. இந்நிலையில் இந்த விஞ்ஞானப் புயலிலும் அரசியல் - புழுதிக் காற்றிலும் வலிமை குன்றியிருந்தும் ஒருவாறு மாசடையாமல், ஆடி விழுந்துவிடாமல், நிலைத்திருப்பது பிரிட்டிஷ் சிங்காதனம்தான். இந்நிலையில் எலிஸபெத் அரசியின் திருமணத்திற்கு ஐந்து அரசர்களும், எட்டு அரசிகளும், எட்டு அரசிளங் குமாரர்களும், பத்து அரசிளங்குமரிகளும் - எல்லாரும் ஐரோப்பிய ராஜ குடும்பத்தினரே - விஜயம் செய்ததே விசேஷம்தான்.

இங்கிலாந்தில் இப்போது நடைபெறுவது ஸோஷலிஸ்ட் என்ற அபேதவாத

அரசாங்கம்—பண நாயகத்தை ஒப்புக் கொள்ளாத ஜனநாயகம். இத்தகைய அரசாங்கத்தில் அரசருக்கு என்ன அதிகாரம் அல்லது செல்வாக்கு இருக்க முடியும் ? எனினும் அரசி எலிஸபெத்தின் ஆடையே வெகு ஆடம்பரமாய், ராஜ குடும்பத்தின் செல்வச் செருக்கை வெளியிடத் தக்கதாய், முத்துக்கள் ஜொலிக்க விளங்கியதாம். 'ஸோஷலிஸ்ட்' அரசி இப்படி ஜொலித்தது ஓர் அதிசய முரண்பாடு. ஆனால் இத்தகைய முரண்பாடுகளை ஆங்கிலேயரின் மனப்போக்கிலும் சரித்திரப் போக்கிலும் காணலாம். சென்ற காலத்து ராஜபக்திக்கும் எதிர்காலத்து அபேதவாத உலகத்திற்கும் ஓர் இணைப்பாக ஆங்கில நாடு அமையும் என்று தோன்றுகிறது.

ஆங்கிலச் சீமையில் யுத்தப் பிற்கால நிலை பொதுமக்களுக்கு எவ்வளவோ கஷ்டமாகத்தான் இருக்கிறது. பொருளாதாரப் புனருத்தாரணத்தை முன்னிட்டு ஆங்கிலேயர்கள் எத்தனையோ வாழ்க்கை வசதிகளைக் குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு மகத்தான சாம்ராஜ்யத்தைக் கட்டி ஆண்டு போகிகளாக வாழ்ந்தவர்கள் யோகிகள் போல வசதிகளைக் குறைத்துக் கொள்வதென்றால், அதுவே ஓர் அதிசய முரண்பாடுதான். ரோகிகள் ஆகி விடாமல் ஆரோக்கிய நிலையில் பொதுமக்களை வைத்து, மற்றப்படி வாழ்வின் சுகபோகங்களையும் வசதிகளையும் கூடக் கட்டுப்படுத்துவதும் மட்டுப்படுத்துவதுமே புதிய 'சான்ஸலரான' (Chancellor) ஸர். ஸ்டாபோர்ட் கிரிப்ஸின் நோக்கம். இந்த ரீதியில்தான் பொருளாதாரப் புனர்நிர்மாணத்திற்குத் தேவையான 'டாலர்'கள் பிரிட்டனிடம் இருக்கமுடியும் என்ற தீர்மானத்துடனே ஸர். கிரிப்ஸ் கட்டுப்பாடுகள் செய்து வருகிறார். இந்நிலையில் அரசியின் திருமணம் ஆடம்பரமாகவே கொண்டாடப்பெற்றிருக்கிறது என்பதை நினைத்துப் பார்க்கவேண்டும். இத்தகைய முரண்பாட்டைப் பொறுத்துக்கொள்ளக் கூடியதுதான் பிரிட்டிஷ் ராஜபக்தி - மனப்பான்மை.

"சூரியன் அஸ்தமிப்பதில்லை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலே!" என்ற பெருமை பழம் பெருமையாகிவிட்டது. "சூரியன் அஸ்தமிக்காததற்குக் காரணமெல்லாம், ஆங்கிலேயரை இருட்டில் எப்படி நம்புவது என்ற பயம்தான்!" என்று ஐரிஷ்காரன் பரிகசித்தானே, அந்தப் பயபக்தியையும் இப்போது உலகம் ஆங்கிலேயருக்குச் செலுத்துவதில்லை. சூரியாஸ்தமனமாகி, அந்தி மாலையின் ஒரு மத்தாப்பு வெளிச்சம் போன்றதுதான் எலிஸபெத் அரசியின் கலியாண ஆடம்பரமெல்லாம்.

எனினும் ஆங்கிலேயர்கள் முற்றும் திருந்தி உலக க்ஷேமத்தையே பெரிதாக மதிக்கும் நிலைக்கு வந்துவிட்டார்கள் என்று சொல்லமுடியாது. பாலஸ்டின் பிரதேசத்தில் யூதர்களுக்கும் அராபியர்களுக்கும் சச்சரவு ஏற்படாத நிலையில் ஆங்கில நாடு உருப்படியாகச் செய்துவிட்டதா ? " ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயுள்ள புகைச்சலைப் போக்கி மறுபடியும் உலகப்போர் ஒன்று வந்து உலக நாகரிகத்தை அழித்துவிடாதபடி செய்யத்தான் பிரிட்டன் ஏதாவது உருப்படியான நன்முயற்சிகள் செய்து வருகிறதா ?

நமது தேசத்திலே தான் பாக்கிஸ்தானுக்கும் இந்திய யூனியனுக்கும் இடையேயுள்ள சச்சரவுகள் முற்றிவிடாதபடி ஆங்கிலேயர்கள் உதவி செய்கிறார்களா, உதவி செய்யப்போகிறார்களா ? பாக்கிஸ்தான் விளைக்கும் தொல்லைகளை ஆங்கிலேயர் தூவிய விதைகளின் விளைவு தானே ?

பாக்கிஸ்தானின் சதியால், தூண்டுதலால், ஆதரவால், ஒத்துழைப்பினால் காஷ்மீரத்தில் படையெடுப்பும், கொலைகளும் கொள்ளைகளும் நடந்திருக்கின்றனவே—இத்தகைய பாக்கிஸ்தான் பேயாட்டம் கண்டும் இத்தொல்லைகள் தீரப் பட்சபாதம் இல்லாமல் ஆங்கிலநாடு ஏதாவது ஆலோசனை சொல்லுகிறதா ? படையெடுப்பு பாக்கிஸ்தானுக்கு அனுகூலமாக வெற்றி பெறவில்லையென்று தெரிந்ததும், காஷ்மீரின் தலைவரான

பருத்தி நூல்களுக்குப் பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி லிட்.

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

5,00,000 நூற்கும் கதிர்கள். நெம்பர் 80 வரை நூல்கள்

எங்களுடைய விசேஷமான நூல்கள் : ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக்கேற்றிய நூல்.

நாங்கள் சப்ளை செய்வது : கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக் கேற்ற வர்ப்பு நூல்கள் கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக் கேற்ற மிருதுவான சன்ன நூல்கள், எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றவை.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

*

மானேஜர்கள் :

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

ம து ரை.

ஷேக் அப்துல்லா காஷ்மீர் வாசிகளின் முடிசூடா மன்னராகி விட்டாரென்று கண்டதும், ஆங்கிலேயர்களின் இரு பெரும் பத்திரிகைகள், "காஷ்மீரத்தையும் பிரித்துவிட்டால் என்ன?" என்று தானே ஒரு விபரீத ஆலோசனையை வெளியிட்டிருக்கிறது.

"காஷ்மீர், முஸ்லிம்களை அதிகமாக வுடைய பிரதேசமாகையால் அதுவும் அதைச் சேர்ந்த எல்லைப்புறப் பிரதேசங்களும் பாக்கிஸ்தானைச் சேர வேண்டியவைதான். இந்துக்களை அதிகமாக வுடைய ஜம்மு பிரதேசம் மட்டும் இந்திய யூனியனைச் சேர்ந்துகொள்ளலாம்" என்று எழுதுகிறது 'லண்டன் டைம்ஸ் (London Times) பத்திரிகை.

காஷ்மீர் மாகாணம் முழுதும் இந்தியத் தீபகற்பத்தின் பந்தோபஸ்திற்கே—பாக்கிஸ்தான் இந்தியயூனியன் இரண்டும் சேர்ந்த இந்தியாவுக்கே—இன்றியமையாதது என்பதையும், 'டைம்ஸ்' பத்திரிகை ஒப்புக்கொள்கிறது. எல்லைப்புறக் கொள்ளைக்காரர்களிடமிருந்தும், வேறு அன்னியப் படையெடுப்புகளிலிருந்தும் இந்தியாவைக் காப்பாற்றுவதற்கு இந்தியாவும் பாக்கிஸ்தானமும் ஒத்துழைக்க வேண்டுமென்றும், அதற்குக் காஷ்மீரின் பிரிவினை சாதகமாகலாம் என்றும் 'டைம்ஸ்' அபிப்பிராயப்படுகிறது.

'மான்செஸ்டர் கார்டியன்' (Manchester Gaurdian) என்ற பிரிட்டிஷ் பத்திரிகையும் 'டைம்ஸி'ன் அபிப்பிராயத்தை எதிரொலிக்கிறது. வட இந்தியாவிலுள்ள முஸ்லிம்களெல்லாம் காளடைவில் ஓர் இஸ்லாமியப் பேரியக்கத்தில் கலந்து விடுவார்களென்றும், அதனால் மிகப் பெருங்கஷ்டங்கள் எதிர்காலத்தில் ஏற்படக் கூடுமென்றும் 'மான்செஸ்டர் கார்டியன்' பயமுறுத்துகிறது.

இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே உள்ள எல்லைச் சந்திப்பில் காஷ்மீர் இருப்பதால், ரஷ்யாவுக்கு விரோதமான தங்கள் முயற்சிகளில் முஸ்லிம்களின் கூட்டுறவு தேவண்டுமென்றுதான் இங்கிலாந்து பாக்கிஸ்தானுக்குப் பரிந்து பேசுகிறது. இந்தியாவுக்குத் தலைபோலிருக்கும் காஷ்மீரின் தலைவிதியைப் பாக்கிஸ்தான் - பிரம்மா (ஜின்னா ஸாகேப்) விதிக்கட்டும்!—என்று பிரிட்டன் கருதுவதுபோலத் தான் தோன்றுகிறது. தன் கூீனதிசையிலும் பிரிட்டனுக்கு நல்ல புத்தி வந்துவிட்டதாகத் தெரியவில்லை.

இந்தியப் பெருந் தலைவர்களான மகாத்மா காந்தி முதலானவர்களோ பிரிட்டனுடன் மனப்பூர்வமாகவே நல்லெண்ணத்துடன் நடந்துகொள்கிறார்கள். அதிகாரத் திமிரால் ஆங்கில ஆதிக்கம் இழைத்த கொடுமைகளை இந்தியப் பொதுஜன உள்ளமும் மறக்கத் தயாராகவே இருக்கிறது. எலிஸபெத் அரசியின் திருமணத்திற்கு இந்திய நல்லெண்ணத்தின் அறிகுறியாக மகாத்மா காந்தியும் வெகுமதி அனுப்பியுள்ளார். எனினும் ஆங்கிலேயர்கள் பழைய 'பிரித்தாளும்' சூழ்ச்சிகள் இன்னும் பலிக்குமென்று நம்பினால் ஏமாற்றமே அடைவார்கள்.

காஷ்மீரத்தைக் குறித்து ஆலோசனை சொல்லுகிறவர்கள் அங்குள்ள பொது மக்களின் விருப்பத்தையும் ஷேக் அப்துல்லாவின் மனநிலையையும் புறக்கணிப்பது அநிசயமாகவே இருக்கிறது. பெருந் தொகையினரான முஸ்லிம்களோடு கூடிய காஷ்மீரத்திலே பொது ஜனவாக்கு பாக்கிஸ்தானை நோக்கிவிட்டால், அது இந்திய யூனியனுக்குச் சம்மதந்தான் என்பதை நம் தலைவர்கள் ஏற்கெனவே தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். ஆனால் படையெடுத்தவர்கள் செய்த பயங்கரமான கொடுமைகளால் "இதுவோ பாக்கிஸ்தான் ராஜ்யம்?" என்று காஷ்மீரின் முஸ்லிம் பிரஜைகளும் அஞ்சுகின்றனராம். காஷ்மீரின் பொருளாதார நிலையும் இந்திய யூனியனுடன் இணைப்பிற்கே அனுகூலமாயிருக்கிறது என்கிறார் ஷேக் அப்துல்லா. எல்லாவற்றுக்கும் மேலாக இந்திய யூனியன் தன்னுடைய பாதுகாப்பையும் கவனிக்க வேண்டுமல்லவா?

பாக்கிஸ்தானின் மனப்பான்மை இன்னும் இந்திய யூனியனை உருக்குலைக்கும்

நிலையிலேதான் இருக்கிறது. ஹைதராபாத்தில் இன்னும் மக்களுக்குப் பொறுப்பாட்சி வழங்கப் பெறவில்லை. முஸ்லிம் லீகைச் சேர்ந்தவர்கள் இன்னும் இந்திய யூனியனில் மதவெறியையும் வகுப்புப் பகைமையையும் மூட்டி வருகின்றனர். சிலர் 'ஐந்தாம் படையின'ராகவும் ரகசியமாக வேலைசெய்து வருகின்றனர். என்பதற்கும் சான்றுகள் கிடைக்கின்றன.

காஷ்மீரத்தில் படையெடுத்தவர்கள் வெற்றியடைந்திருந்தால் சீக்கியர்களுக்கும் ஹிந்துக்களுக்கும் எவ்வளவோ தொல்லைகள் விளைந்திருக்கும். அதே சமயத்தில் வகுப்புவாதிகள் இந்திய யூனியனில் உள்நாட்டுக் கலகங்களையும் குழப்பங்களையும் கிளப்பிவிட்டிருக்கவும் கூடும். அநாவசியமான தாமதம் ஏற்படாமல் இந்திய யூனியன் காஷ்மீருக்குச் செய்த உதவிதான், பொதுவாக இந்தியாவுக்கும் சிறப்பாகக் காஷ்மீருக்கும் பேராபத்துக்கள் ஏற்படாமல் தடுத்திருக்கிறது.

இப்படியெல்லாம் இருக்கும்போது, இந்தியாவை ஏற்கெனவே பிரித்து வைத்தது போதாதென்று, காஷ்மீரத்தையும் பிரித்துவிட வேண்டுமென்று ஆலோசனை சொல்லுகிறவர்களின் மூளை என்னவென்பது? சிறிது நாமும் ஆலோசித்துப் பார்த்தால் "அவர்களுக்கு மூளைக்கோளாறு ஒன்றுமில்லை; இதயம் தான் நல்ல நிலையில் இல்லை!" என்று புலனாகும். தங்கள் ராஜபக்திக்குரிய எலிஸபெத் அரசியின் திருமண வைபவம் நடந்த இம்மங்களமான சந்தர்ப்பத்தை முன்னிட்டாவது, ஆங்கிலேயர்கள் இந்தியாவின் நீடித்த க்ஷேமத்திற்குப் பங்கம் விளைக்கும் ஆலோசனைகளை வற்புறுத்தமாட்டார்கள் என்றும், இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் ஒருங்கே நல்ல காலம் பிறக்குமென்றும் நம்புவோம்.

ஜின்னாவின் பிடிவாதமான மனப்பான்மை மாறும் என்று எண்ண இடமில்லை. காஷ்மீரில் தமது கொள்கைக்குத் தோல்வி கண்டும் தம் மத சாம்ராஜ்யக் கனவுகளை ஜின்னா அறவே கைவிடுவாரென்று எண்ணமுடியாது. பாக்கிஸ்தானத்திலிருந்து வெளியேறி வரும் இந்துக்களையும் சீக்கியர்களையும் "மீண்டும் டாக்கிஸ்தானுக்குப் போங்கள்" என்று கூறுவதும் பொறுப்பற்ற ஆலோசனைதான். அடுத்த ஆறுமாத காலத்திற்குள் பாக்கிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் போர் விளையவும் கூடும் என்று அகாலி சீக்கியத் தலைவர் மாஸ்டர். தாராஸிங் செய்திருக்கும் எச்சரிகையை வீண் பயமென்ற அலட்சியம் செய்வதும் சரியன்று. முஸ்லிம்களானாலும், ஆங்கிலேயர்களானாலும், எத்தகைய மேதாவிகளானாலும் செல்வாக்குள்ளவர்களானாலும் உருப்படியான ஆலோசனை சொல்லுகிறவர்களே இந்தியாவின் நண்பர்கள், உலகத்திற்கும் நண்பர்கள். (நே. நே.)

காரைக்கால் அம்மையார்

(தமிழ்த் தொண்டன்)

காட்சி 1

[சமுத்திர கோஷம், மாலுமிகள் கோஷம். ஜனச்சந்தடி. யானைகளின் மணியோசையோடு யானைகள் விடும் பெருமூச்சுச் சத்தம்.]

மாலுமிப் பாட்டு :

காரைக்கால் கடலுக்குள்ளே
கடகடெனப் படகுதள்ளு,
ஆணையும் பெண்ணையும்
அடுக்கடுக்காய்க் கரைக்குவர,
கோலப்பா! தடுப்பெடுத்துப்
படகுதள்ளு, படகுதள்ளு ;
ஏலோ! படகுதள்ளு
ஏலையா! படகுதள்ளு ;
ஏலேலோ! அயிலலோ!

[பரமதத்தனும் தனதத்தனும் வருகிறார்கள். குரல் தூரத்திலிருந்து மெதுவாக நெருங்கிவந்து கேட்பதுபோல்.]

தனதத்தன் : கடாரத்து யானைகளை அப்படியே மொத்தமாக வாங்கிவிடலாமே? என்ன மாப்பிள்ளை ! பாண்டிய சமஸ்தானத்தில் நல்லவிலை கிடைக்குமே.

பரமதத்தன்: ஏன்? மாமா! நமது மன்னருக்கே தேவையென்று கேள்விப்பட்டேனே. வடநாட்டுப் படையெடுப்புக்கு உபயோகமாயிருக்குமே.

தன : மன்னர் அபிமானம் வேண்டியதுதான் ; பண அபிமான வாணிபத்தின் உயிர்நாடி.

பர : அதை நான் மறப்பேனா ? மன்னர் அபிமானமும் நமக்கு ஒரு வாணிபம்தானே.

தன : (லேககனை நோக்கி) கர்மதத்தா ! நீ போய் அந்த வியாபாரிகளிடம் பேச்சுக் கொடுத்துப் பார்.

பர : வழிக்கு வருவானென்றுபட்டால், அழைத்தே வந்துவிடு.

தன : என்ன ? புனிதவதி நேற்று வீட்டுக்கு வந்திருந்தபோது ஆருத்ரா தரிசனம் பார்க்கச் சிதம்பரம் போக வேணுமென்று சொன்னாளே ; நீரும் போகிறீரா ?

பர : என்ன மாமா ! கப்பல் வருகிற காலமாச்சே. துறையை விட்டுப் போக முடியுமா ? அவள் சிறு பிள்ளைத்தனமாய்த் திருவிழா, திருவிழா என்கிறாள். நம்ம உத்ஸவமே பெரிய உத்ஸவமாயிருக்கிறதே.

தன : இந்தப் பேயாட்டத்திற்கு ஓய்வு ஏது ? ஒழிவு ஏது ? அவளை மடமோவது அனுப்பிவையுமே.

பர : தேரும் திருவிழாவுமாய்த் திரிந்துகொண்டேயிருந்தால், வீடு நடப்பது எப்படி ?

தன : புனிதவதி நடனம் தரிசித்தால், காடாய்ப் போகுமா வீடு ?

(தூரத்தில உரத்த சிரிப்பு)

அன்னிய வியாபாரி: விற்கத்தான் வந்திருக்கிறோம் ; விளையாடவா வந்திருக்கிறோம் ? காடு கடந்து கப்பலேற்றிக் கடலும் கடந்து யானைகள் கொண்டு வந்தால் இதுவா சொல்லுவீர் ? இன்னும் சொல்லுவீர் ! கொண்டுவந்த யானைக்குக் கொட்டாரமும் கட்டிக் கொடுக்க வேண்டியது எங்கள் கடமைதானே !

கர்மதத்தன் : வளைத்து வளைத்துப் பேசிப் பயன் என்ன? நீரும் விற்கத்தான் வந்திருக்கிறீர், நாங்களும் வாங்கத்தான் இருக்கிறோம். நாங்கள் சொல்லுவதற்கும் தாங்கள் சொல்லுவதற்கும் அதிக வித்தியாசமும் இல்லையே ? முதலாளியிடம் நேரிலேயே முடித்துக் கையடித்துவிடலாமே.

தன : (பரமதத்தனை நோக்கி) மாப்பிள்ளை ! அதெல்லாம் இருக்கத்தான் செய்யும். வீடு என்றால் வாசற்படியும் உண்டு. என்ன கர்மதத்தா ! கையோடு கொண்டு வந்து விட்டாயே ! முடிந்துவிட்டதா ?

கர் : எல்லாம் முடிந்த மாதிரிதான். இப்படி வாருங்கள் ஒரு விஞடி.

பர : (தனக்குள்) அப்படி வளர்த்து விட்டார். அவனைச் சொல்லி என்ன ? அந்தச் சிவம் இங்கும் குடியேறி விட்டது ! ....ஆனல் மாமா சிவ தர்மத் தோடு வணிக தர்மத்தையும் மறக்க வில்லை.......என்ன மாமா !

தன : கொடுக்க வந்தவர் கொடுக்கா மலா போய்விடுவார் ? தாம்பூலம் கொடுங் கள், மாப்பிள்ளை !

அ. வி. : இவற்றைத் தாங்கள் அங்கி கரிக்க வேண்டும். திவாந்தரத்து மாங் கனிகள். அபூர்வமானவை. இரண்டு தான் கிடைத்தன.

காட்சி 2

[பரமதத்தன் வீடு. புனிதவதி சிவ பூஜையில்]

புனிதவதி :—

ஆனந்தம் ஆடரங்கு !
ஆனந்தம் பாடல்கள் !
ஆனந்தம் பல்லியம் ;
ஆனந்தம் வாத்தியம் !
ஆனந்தமாக அகில சராசரம்
ஆனந்தம், ஆனந்தக்கூத்து
உகந்தானுக்கே !

வேதங்களாட மிகு ஆகம மாட,
கீதங்களாடக் கிளரண்டம் ஏழாட,
பூதங்களாடப் புவனம் முழுதாட,
நாதம்கொண் டாடினன் நாதாந்த
நட்டமே !

ஆதி பரனுட, அங்கைக் கனலாட,
ஓதும் சடையாட உன்மத்தம் உற்றுடப்
பாதி மதியாடப் பாரண்டம் மீதாட
நாதமோ டாடினன், ஞானனந் தக்கூத்தே.

கர் : அம்மா ! அம்மா ! (கதவைத் தட்டுகிறன்.)

புனி : யார் அது ? " நாதமோடாடி னன், ஞானனந்தக் கூத்தே "

கர் : அம்மா! நான்தான் கர்மதத்தன். முதலாளி ஐயா இந்த மாங்கனிகளைக் கொடுத்து அனுப்பியிருக்கிறர்கள். அபூர்வமானதாம்.

புனி : மாங்கனிகளா ? அப்படி வை.

அன்பால் அடைவது எவ்வாறுகொல் ?
மேலதோர் ஆடுஅரவம்
தன்பால் ஒருவரைச் சாரவொட்டாது !
அதுவேயுமன்றி,
முன்பாயினதலை ஓடுகள் கோத்து
அவை ஆர்த்து ; வெள்ளை
என்பாயினவும் அணிந்து அங்கோர்
ஏறுஉகந்து ஏறவதே."

பாலி : (வெளியே உரத்த குரலில்)

பூதாண்ட பேதாண்ட போகாண்ட
யோகாண்ட
மூதாண்ட மீதாண்ட மோகாண்ட
தேகாண்ட
நாகாண்ட ஐங்கரு மத்தாண்ட
தற்பரத்
தேகாந்த மாம்பர மாண்டத்த
என்பவே

பசிக்கிறது ; சாப்பாடு போடு. சிவ சிதம் பரம் ! திருச்சிற்றம்பலம் !

புனி : (காலில் விழுந்து) ஐயன் வர வேணும். என் அப்பன் வரவேணும். இதோ தீர்த்தம். திருவடி விளக்கிக் கொள்ளுங்கள். அமுது படைக்கிறேன். இந்த மாங்கனியையும் படைக்கிறேன்.

பா : கறி அமுது, கனி அமுதோ ? விசேஷம்தான்.

புனி : கறியமுது இன்னும் சித்தமாக வில்லை. மன்னிக்க வேணும்.

பா : மன்னிக்கவா ? அடடா, என்ன அபூர்வருசி ! அமிர்தமாயிருக்கிறதே ! இதற்குமேல் வேறெரு கறி அமுதும் வேணடுமோ ? சிவசிதம்பரம் ! சிவ சிதம்பரம் !

புனி : தேவர் திருப்தி அடியாள் பாக்யம்.

பா : ஆனந்தம் ! ஆனந்தம்! அன்பால் மாங்கனி கொடுத்தாய். விரைவில் ஞானக்கனி பெறுவாய்.

காட்சி 3

[அன்றிரவு. அர்த்தஜாம பூஜைமுடிந்து சேமக்கலம் சங்கு சப்தம் தூரத்தில். அருகில் ஆந்தை அலறல். அயர்ந்த

நித்திரையிலிருக்கும் புனிதவதி அருகில் உறக்கமில்லாத கணவன்.]

புனி: (புலம்பல்) மாங்கனி கொடுத்து ஞானக்கனி பெறுவாய்....

பர: மீண்டும் மாங்கனியா? செப்படி வித்தையா? இவள் பெண்ணு, பேயா?

புனி: (புலம்பல்) 'பேய் நின்று பாடப் பெருங்காடு அரங்கா.......

பர: 'பேய் நின்று பாடப் பெருங்காடு அரங்கா' மாங்கனி! பேய்! காடு! பேய்தானோ? நமக்கு இனி இங்கு அடுக்காது. பேயோடு பெருவாழ்வா? மாங்கனியென்று மாயக்கனியும் உண்டேனே! நல்ல வேளை; மூன்றாவது கனி மறைந்தது. அதையும் உண்டிருந்தால் பிழைத்திருப்பேனோ என்னவோ? அருளால் வந்தது என்றாள். அருளோ, ஆவேசமோ? யார் கண்டார்? நல்லதம்மா; தேவதையே! இனி உன்னோடு வாழ்தல் அரிது.

காட்சி 4

[தனதத்தன் வீடு]

புனி: "பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் காதல் சிறந்து, நின் சேவடியே சேர்ந்தேன்; நிறம் திகழும் மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே! எஞ்ஞான்று தீர்ப்பது இடர்!"

தன: புனிதவதி, புனிதவதி!

புனி: என்ன, அப்பா! அழுது கொண்டு வருகிறீர்?

தன: என்ன சொல்வேன்? உன் கணவர் மீண்டும் கல்யாணம் செய்து கொண்டாராம். கன்னியாகுமரியிலிருந்து வந்த தர்மதத்தர் சொன்னார்... ஐயோ குழந்தாய்!

புனி: மீண்டும் மணம் செய்து கொண்டாரா? எப்படியாவது எங்கேயோ சந்தோஷமாயிருந்தால் சரிதானே.

பார்த்ருடுவின்

பாலசஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்.

58 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச் சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக் கண்டு ஏமாறுதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவிதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில்,
கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புதுபிள்ளை தெரு,
தெப்பக்குளம் போஸ்டு

தன : சந்தோஷத்திற்கு என்ன குறை? குபேர சம்பத்தோடு வாழ்ந்து வருகிறாராம். தீவதீவாந்தரங்களில் கப்பல் வியாபாரம் செய்ததில், அவ்வளவு பொருளும் கிடைத்துவிட்டதாம்.

புனி : எல்லாம் அவன் அருள்தானே.

தன : உன்னையும் மறந்து, ஊரையும் மறந்து, வேறு கல்யாணமும் பண்ணிக் கொண்டாரே! குழந்தை வேறு பிறந்திருக்கிறதாம். ஒரு ஜோஸியர் கூடச் சொல்லவில்லையே அம்மா! உனக்கு இந்த விதி வருமென்று!

புனி :

"அருளே உலகெலாம் ஆள்விப்பது ஈசன்
அருளே பிறப்பறுப்பதானல்—அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன்
எஞ்ஞான்றும்
எப்பொருளும் ஆவதெனக்கு"

தன : எப்படியும் புருஷன்தான் உனக்குப் பொருள். அவரிடம் உன்னைக் கொண்டு சேர்ப்பிப்பது என் கடமை. அதை நிறைவேற்றி இறைவன் அருள் புரியுமாறு பிரார்த்தனை செய்துகொள், அம்மா!

புனி : "இறைவனே எவ்வுயிரும் தோற்றுவிப்பான்; தோற்றி இறைவனே ஈண்டு இறக்கம் செய்வான்! இறைவனே எந்தாய் என இரங்கும்; எங்கள் மேல் வெந்துயரம் வந்தால் அது மாற்றுவான்!"

காட்சி 5

[மணப்பாடு சத்திரம். புனிதவதியார், தனதத்தன், உறவினர்.]

தன : கர்மதத்தா! நீ போய், 'நாங்கள் எல்லோருமே வந்திருக்கிறோம்; பார்க்க வருகிறோம்' என்று பரமதத்தரிடம் சொல்லு.

உற : சொல்லி விடுகிறதென்ன? பெண்ணைக்கொண்டு அவர் கையிலே ஒப்படைத்து வரவேண்டியதுதானே. இதற்குத் தூது என்ன தூது!

தன : அண்ணு! பதறாத காரியம் சிதறாது; பார்ப்போம்.

புனி : எல்லாம் சிவன் அருள்.

(பரமதத்தன், இரண்டாவது மனைவியையும் குழந்தையையும் சத்திரத்துக்கு அழைத்து வருதல், புனிதவதியார் பரமதத்தனைக் கண்டதும் எழுந்து நிற்கிறார்.)

தன : வரவேணும், வரவேணும்! மாப்பிள்ளை! நாங்களே அங்கு வருவதாகத்தான் இருந்தோம்......ஆ! என்ன செய்கிறாய்!

பர : அம்மா, புனிதவதியாரே புனிதவதியாரே!

புனி : ஐயையோ!

உற : என்ன பைத்தியம் இது? பெண்டாட்டி காலில் விழுகிறது!

பர : அம்மா! நான் உமது அருளால் வாழ்கிறேன். இதோ என்னுடன் வணங்குகிறாளே, இவள் என் மனைவி! இவளையும் ஆசீர்வதிக்க வேணும். இந்தப் பெண் குழந்தைக்கு உமது பெயரைத்தான் இட்டிருக்கிறோம். உம்முடைய அருளால் இந்தக் குழந்தை க்ஷேமமாயிருக்கவேணும்.

புனி : ஐயையோ! அடியாளையும் இப்படிச் சொல்லலாமோ?

பர : அடியாளா! மனிதப் பிறவியே இல்லையே! நீர் எங்கள் குலதெய்வம். அப்போதே அறிந்து கொண்டேனே! அன்று நான் அனுப்பிய மாங்கனிகளில் இரண்டில் ஒன்றைப் பரதேசிக்குக் கொடுத்துவிட்டு, அந்த ஒன்றுக்கு இரண்டாக மாயக்கனி கொண்டு வந்தீரே! தர்மதத்தரே! நாம் எல்லாரும் சேர்ந்து வணங்கத்தக்கவர் இவர்! இவர்!

புனி : வேண்டாம்! வேண்டாம்!

"பெறினும், பிறிதியாதும் வேண்டாம்
நமக்கு ஈது
உறினும், உருதொழியுமேனும்—
சிறிதுணர்த்தி
மற்றொருகண் நெற்றிமேல் வைத்தான்
தன்பேயாய
நற்கணத்தில் ஒன்ருய நாம்"

["வானமும் மண்ணும் எல்லாம் வணங்கு பேய் வடிவமானர்!"]

ஒரிஸ்ஸா, நிஜாம், ஆந்திரா ஜில்லாக்கள்
தமிழ் நாட்டிற்கு ஏஜண்டுகள்

ஸீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்

பெர்ஹாம்பூர் — செகந்திராபாத்
பெஜவாடா — மதுரை

காட்சி 6

[ஆலங்காட்டு மயானம். சிதை எரிகிறது. நரி ஊளையிடுதல். பேய்க்காற்று அலறி அடிக்கிறது. நள்ளிரவு.]

புனிதவதி :

“ எமக்கிதுவோ பேராசை ? என்றும்
தவிராது !
எமக்கு ஒருநாள் காட்டுதியோ ?
எந்தாய் !—அமைக்கவே
போங்தெரி பாய்ந்தென்ன புரிசடையாய்!
பொங்குஇரவில்
எந்து எரிபாய்ந்து ஆடும் இடம் ?”.

அந்த நடனத்தைத்தான் விரும்புகிறேன். இந்த ஸ்மசானத்திலே பறவைகள் துளைத்துப்போட்ட மண்டை ஓட்டை நரி கௌவுகிறது. எரிந்து கரிந்த விறகுகளிலிருந்து புகை மண்டுகிறது.

பேய்கள் பறைகொட்டுகின்றன. அந்தப் பேய்களின் முகமும் கண்ணும் நெருப்பைக் கக்குகின்றன. பிளந்தவாய்; சட்டிவயிறு ; நீண்ட பல் ; சிவந்த ரோமம். இவ்வளவு பயங்கரத்திலும் ஏதோ ஒரு பயங்கர அழகு.

ஜடைதிக்கொடுதிக் அந்தங்களிலும் மின்வெட்டுவதுபோல் வெட்டிப் பாய்கிறது. வீசியெடுத்த பாதம் அண்ட கடாகத்தையும் முட்டுகிறது. என்ன அழகு ! என்ன அழகு !

“அண்டமுற நிமிர்ந்து ஆடும் எங்கள் அப்பனிடம் திரு ஆலங்காடே !”

“ அடிபேரில் பாதாளம் பேரும் ! அடிகள்
முடிபேரில் மாமுகடு பேரும் ;—கடகம்
மறிந்தாடு கைபேரில் வான்திசைகள் பேரும்;
அறிந்து ஆடும், ஆற்ருது அரங்கு !

அறிந்து ஆடும், அந்த நடன மண்டபம் தாங்காது ! அதோ ஆட்டம் விசையாட்டமாகிறதே? மண்ணும் ஆடுகிறது, விண்ணும் ஆடுகிறது ! எல்லாம் ஏகமயமாக ஏக அழகு ! ஏகபயங்கரம்!

“முன்னிய பேய்க்கணம் சூழச்சூழ,
காடும் கடலும் மலையும் மண்ணும்
விண்ணும் சுழல, அனல் கையேந்தி
ஆடும் அரவப் புயங்கன் எங்கள்
அப்பன் இடம் திருஆலங்காடே !”



ஸ்ரீ டிமிர் பாரன் பட்டாச்சார்ய 1910-ம் வருஷம் கல்கத்தாவில் பிறந்தவர். அவர் தனது 18-வது வயதில் 'சரோட்' என்ற வாத்தியம் கற்றார். அதுதான் அவருக்கு முதல் கீர்த்தியை அளித்தது. அவர் உஸ்தாத் அமீர்கான், உஸ்தாத் அலாவுதீன்கான் இவர்களின் சிஷ்யர். 1930-ம் வருஷம் உதய் சங்கர் கோஷ்டியில் சேர்ந்து அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பா முதலிய இடங்களில் சுற்றுப்பிரயாணம் செய்தார். அந்நாடுகளிலெல்லாம் அவரின் திறமை நன்கு தெரிந்துகொள்ளப்பட்டது. அவரின் இந்திய சங்கீதத்தை வாத்தியங்களில் நன்கு அமைத்து வாசிப்பதின் திறமை அவருக்கு அளவில்லா கீர்த்தியையும் ஐஸ்வர்யமும் பெற்றிருக்கிறது.

டிமிர் பாரன் ஸ்வரப் பாடகர்

கீர்த்தி பெற்ற பாடகரும் இந்திய சங்கீதத்துக்கு புது ஸ்வரங்கள் ஏற்படுத்தி இந்திய வாத்தியங்களின் வாசிப்பையே புதுப்பித்தவருமான டிமிர் பாரன் சொல்லுவதாவது:

"சங்கீத சிருஷ்டிக்கு டீயின் உதவியை நான் மிகவும் மதிக்கிறேன். எனது பி டையில் அது அடிக்கடி ஒரு ஸ்வரத்தையும்-லயத்தையும் தூண்டுகிறது. அதை வாத்தியத்தில் வாசிக்க அது ஒரு உன்னத வாத்திய இசைப் பொருத்தத்தின் உச்ச நிலையை அடைகிறது."

டீ உற்சாகத்திற்கு

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது

IR 389 TM

சரித்திரக் கதை

அக்பரின் நிராசை

சோ. மு. ஜகந்நாதன்

இந்தியாவை அக்பர் மகா சக்கரவர்த்தி ஆண்டு வந்த காலம். இந்தியாவில் இந்துக்களின் ஒத்துழைப்பின்றித் தன் மாபெரும் ராஜ்யத்தை நிலை நிறுத்த முடியாது என்ற உண்மையை அறிந்திருந்தார் முகலாய சக்கரவர்த்தி. அக்காலத்தில் இந்துக்களில் முன்னணியிலிருந்த இராஜபுத்திரர்களின் நட்பை நாடினர். தன் ராஜ்யத்தில் இராஜபுத்திரர்களுக்குப் பல பெரிய பதவிகளை அளித்தார். இந்து மதத்தைக் கௌரவிக்க 'ஜிஸ்யா' வரியை நீக்கினர். புலால் உண்ணுதலை நீத்தார். தன் அரண்மனையிலேயே இந்துமதத் திருவிழாக்களைக் கொண்டாட ஏற்பாடு செய்தார். இராஜபுத்திரப் பெண்மணிகளைத் தான் மணந்து கொண்டதுமன்றி தன் புத்திரர்களுக்கும் மணம் செய்வித்தார்.

இது சரித்திரப் பிரசித்தம்.

* * * *

அக்காலத்திய இராஜபுத்திர நாடுகளில் ஒன்று மீவார். அந்நாட்டின் மன்னன் ராணு உதயசிங். அவரது குமாரி கமலாதேவி. அவள் மிக்க அழகி. காண்போர் மனதை கவரத்தக்கவள். கன்னிப் பருவத்தை கடந்து கல்யாணப் பருவத்தை அடைந்தாள். மீவார் மன்னன் வீரர்களில் சிறந்த இராஜபுத்திர வீரனை தேடிக் கொண்டிருந்தான்.

இந்த சமயத்தில்தான் அக்பர் இராஜபுத்திர பெண்களை மணக்கும் கொள்கையைக் கைக்கொண்டார். மீவாரில் கமலாதேவி கல்யாணத்திற்குக் காத்திருப்பதை அறிந்ததும் காலம் கழிக்காமல் முகலாய சாம்ராட் மீவார் ராணுவிற்கு தூதனுப்பினர்.

* * * *

மீவார் உதயசிங்கின் அரண்மனை. அரசன் மந்திரி பிரதானிகளுடனும் இன்னும் பல அறிஞர்களுடனும் கொலுவீற்றிருந்தான்.

அக்பர் அனுப்பிய தூதன் உத்திரவு பெற்று சபைமுன் வந்தான். சமுகத்திற் மரியாதையைச் செலுத்திவிட்டு விண்ணபிக்கிறான்.

"அரசே! வணக்கம். நமது ஆட்சியின் பெருமை எங்கும் பரவ எங்கள் சாம்ராட் பெரிதும் விரும்புகிறார். எங்கள் முகலாய சாம்ராட் மகா அக்பரின் தூதன் நான்.

முகலாய சாம்ராட் முகலாயர்களுக்குள்ளும், இராஜபுத்திரர்களுக்குள்ளும் ஒற்றுமை நிலவ வேண்டுமென விரும்புகிறார். எல்லோருக்கும் வழிகாட்டியாக தான் ஒரு இராஜபுத்திர கன்னியை மணம் செய்து கொள்ள விரும்புகிறார். தங்கள் குமாரியை அரசர் மணம் செயது கொள்ள உத்தேசம். தங்களிடம் கூறவே என்னை அனுப்பியுள்ளார். தாங்களும் அதை மகிழ்வுடன் ஏற்றுக் கொள் வீர்களென நம்புகின்றேன்."

பேய்களும் மருண்டு ஓடுகின்றனவே!

"பேய்கள் கூடிப் பிணங்கள் மாந்தி
அணங்கும் பெருங் காட்டில்
மாயன் ஆட, மலையான் மகளும்
மருண்டு நோக்குமே!"

இந்த ஆட்டத்திலும் அழகு கொஞ்சுகிறது தேவியின் திருவடியிலே; அழகு சிறகிறது பாம்புபோல, பரமன் திருவடியிலே!

அழகுமட்டுமா, ஒழுங்கு முறை இசை எல்லாம் கலந்திருக்கின்றன இந்த மகா நடனத்திலே!

—:—

இராஜசபையில் அமர்ந்திருக்கும் மந்திரி பிரதானிகளுக்கு கட்டுக் கடங்காத மகிழ்ச்சி. இனிமேலாவது இந்த முகலாய சச்சரவுகள் ஒழியுமென்ற நம்பிக்கை. ஆனால் ராணாவின் மீசைத் துடிப்பையும், கனல் பொங்கும் கண்களையும் கண்டு பேசாதிருந்தனர்.

சிறிது நேரம் மௌனம்.

ராணாவின் இடிபோன்ற குரல் மௌனத்தைக் கலைத்தது.

"போதும்! நிறுத்து! உங்கள் அரசரின் பிரதாபம். ராஜா பகவன்தாஸ் போன்று குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பு என்று என்னையும் நினைத்தார் போலும் உன் அரசர்.

புராதன வழக்கத்தை புறக்கணிக்கும் மடையன் நானல்ல. இதுவே உனதரசருக்கு நான் கூறும் பதில்."

இதைக் கேட்ட சபையோர் திடுக்கிட்டனர். அரசனின் கோபத்தைத் தணிக்க பலவகையில் முயன்றனர். முடியவில்லை.

"இறுதியாக சாம்ராட்டின் கட்டளை இதுதான். தாங்கள் எங்கள் மன்னனை மருமகனாக ஏற்றுக்கொள்ளா விடில் அடுத்த பௌர்ணமியன்று மொகலாயப் படைகளைச் சந்திக்க தயாராயிருங்கள்"

* * * *

ராணா உதயசிங் புராதன வழக்கங்களில் மிக்க பற்றுள்ளவன். ஆனால் கோழை. ஜாதிக்குரிய ஆண்மையற்றவன்.

ராணாவின் சேனாதிபதி ஜைமால் படை திரட்டலானார்.

பௌர்ணமி அன்று சித்தூர் கோட்டை இராஜபுத்திரர்களால் நன்கு பலப்படுத்தப் பட்டிருந்தது. கோட்டையின் உப்பரிகையிலிருந்து ராணா முகலாய சைனியம் வரும் திக்கை நோக்கிக் கொண்டிருந்தான்.

வெகு தூரத்திற்கு அப்பால் புழுதிப் படலத்தை கிளப்பிக்கொண்டு வரும் முகலாயப் படைகளைக் கண்டதும் அவன் தேகம் நடுங்க ஆரம்பித்தது.

எண்ணற்ற குதிரை வீரர்கள், காலாட் படைகள், பீரங்கிப்படை கொண்ட முகலாய சைன்யத்திற்கு முன் நம் சிறிய படை எம்மாத்திரம்? என்று நினைத்ததும் அவன் தலை சுற்ற ஆரம்பித்தது.

இனி, கோட்டையிலிருந்தால் தன் தலைக்கே ஆபத்து வந்து விடுமென பயந்து மாறுவேடம் பூண்டு ரகசிய வழியாக யாருக்கும் தெரியாமல் மலைப் பிரதேசத்திற்குச் சென்று ஒளிந்து கொண்டான்.

ராணா ஓடிவிட்டதை அறிந்த ஜைமால் மனந்தளரவில்லை. கோட்டையை தீவிரமாக பாதுகாத்து வந்தான்.

மாதக்கணக்காக முற்றுகை நீடித்தது. ஓய்வு ஒழிவற்று குண்டுமாரி பொழியும் பீரங்கிப் படைகளுக்கு முன் ஜைமாலின் மன உறுதி தளரத் தொடங்கியது. கோட்டைச் சுவரும் சிறிது சிறிதாகச் சரிய ஆரம்பித்தது.

ஜைமால் இன்னும் தைரியத்தைக் கைவிடாமல் கோட்டையை பாதுகாத்து வந்தான்.

ஒருநாள் கோட்டை சுவரின் மீது நின்றுகொண்டு ஜைமால் தன் வீரர்களுக்குக் கோட்டையை செப்பனிட உத்திர விட்டுக்கொண்டிருந்தான்.

தன் பீரங்கிப் படையாலும் அடக்க முடியவில்லையே இந்த இராஜபுத்ரர்களை என்று வெகு நாளாக மனத்தாங்கல் கொண்டிருந்த அக்பர், ஜைமால் தான் இராஜபுத்திரர்களின் ஜீவநாடி என்பதை தன் ஒற்றர்கள் மூலம் அறிந்திருந்தார். ஜைமாலை அடையாளம் காட்ட ஒரு துரோகி தன்னிடம் இருக்கும் போது அவருக்கு என்ன கவலை?

'கோட்டையின்மீது அதோ ஜைமால்' என்று துரோகி கூறவும் பீரங்கிப் படைகள் அத்திக்கை நோக்கி சுடத் தொடங்கின.

ஜைமால்—வெற்றிவீரன் ஜைமால்—இராஜபுத்திரர்களின் மானங்காத்த ஜைமால்—குண்டடிபட்டுப் பிணமாக வீழ்ந்தான் தரையிலே.

"வெற்றி! வெற்றி!! வெற்றி!!! எட்டுத் திக்குமெட்டக் கொட்டு முரசே!" என்ற வார்த்தைகளே கடைசியாக அவன்வாயிலிருந்து உதித்தவைகள்.

தலைவனை இழந்த இராஜபுத்திரப்படை அதிகநேரம் எதிர்த்து நிற்க முடியாமல் எதிரிக்குப் பணிந்தது.

* * * *

தோல்வியைக் கேள்வியுற்ற வீரஇராஜ புத்திர மாதர்கள் பெருந்தீ வளர்த்தனர். கமலாதேவி உள்படயாவரும் தீக்குளித்தனர்.

இதையறிந்த அக்பரின்ஆசை நிராசையாகப் போய்விட்டது. யாருக்காக பல்லாயிரக் கணக்கான வீரர்களைப் பலிகொடுத்தாரோ அவள் ஒரே நிமிடத்தில் அக்கினிக்குப் பலியாகிவிட்டாள். அக்பரின் எண்ணமும் தீப்பற்றி எரிந்து வெந்து சாம்பலாயிற்று — கமலாதேவியின் உடலைப்போல.

" கமலாதேவி தீயில் இறங்கி விட்டாள்!" என்ற செய்தியைக் கேட்டதும் அக்பரின் கண்களிலிருந்து இரண்டு துளி கண்ணீர் சிந்திற்று. அது, அவர் கமலாதேவியின் மீது கொண்டிருந்த காதலை உணர்த்திற்று போலும்!



மாண்டிஸோரி – ஒரு புதிய உலகம்

அ. இ.

கல்வி முறைகளைக் குறித்து எத்தனையோ ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. மேலைநாட்டிலே ஸாக்ரடீஸின் நண்பரும் சீடருமான ப்ளேட்டோ காலந்தொட்டு, கல்வி வளர்ந்த கதையை ஆராய்ந்து ஒருவாறு கண்டுகொள்ளலாம். நமது நாட்டிலே உபநிஷத காலம் தொட்டுக் குருகுலக் கல்வி முறைகள் அநுஷ்டானத்தில் இருந்து வந்தன. காடுகளில் உள்ள குருகுல ஆசிரமங்களோடு, நாட்டிலும் பலவேறு காலங்களில் அரசர்கள் உதவிபெற்றுக் கல்விச்சாலைகள் தோன்றியிருந்தன.

மேலைநாட்டில் பழைய கிரீஸில் பிளேட்டோவின் பெயரைப்போல், பின்னாளில் ஸ்விட்ஸர்லாந்திலுள்ள கல்வியாளர்களாகிய பெஸ்டொலாஸி (Pestalozzi,) ப்ரீபெல் (Froebel) ஆகியவர்களின் பெயர்களும் பிரசித்தமானவை இன்றைய உலகில் கல்வித்துறையிலே மாண்டிஸோரி அம்மையார் பெயரே மிகவும் பிரசித்தமானது. இவரது கல்வி முறை பிரசித்தமானது மட்டுமல்ல, புரட்சிகரமானது.

மாண்டிஸோரியின் கல்வி முறை முக்கியமாகக் குழந்தைக் கல்வியைக் குறிப்பதுதான். எனினும் இது பொதுவாகக் கல்வித்துறையிலே ஒரு புரட்சி - வழியை வகுத்திருக்கிறது. கல்வித் துறையில் மட்டுமல்ல, வாழ்க்கைத் துறையிலும்கூட.

இக்கல்வி முறையில் மாறுதல்கள் குழந்தையிடம் மாத்திரமா ஏற்படுகின்றன? ஆசிரியரிடத்திலும் மாறுதல்கள் தோன்றுகின்றன. அதிசயமான மாறுதல் ஆசிரியரிடத்திலும் தோன்றுவதற்குக் குழந்தை காரணமாகிறது. இவர் சித்தாந்தப்படி, குழந்தை தனக்குத் தானே ஆசிரியன், ஆசிரியனுக்கும் ஆசிரியன்—சுருங்கச் சொன்னால் ஒரு குட்டித் தேவதூதன் அல்லது தெய்வ அவதாரம். இந்த அவதாரம் என்றும் இடையறாது நிகழ்கிறது; ஒவ்வொரு வீட்டிலும் நிகழ்கிறது.

இக்கொள்கை உலகில் ஒரு புதிய கருத்தை வெளியிடுகிறது என்பது மட்டுமில்லை; இது ஒரு புதிய கல்வி யுலகத்தையே சுட்டிக்காட்டுகிறது. ஆம், குழந்தைக்குக் கல்வி புகட்டவேண்டும் என்ற பழைய கருத்திற்கும், இக்கொள்கைக்கும் எவ்வளவு வித்தியாசம்! குழந்தை யுள்ளத்தை ஏதோ ஒரு கூடைபோல் கருதி பழைய பாடங்களாலும் கருத்துக்களாலும் நிரப்பும் கல்விமுறைக்கும், இப்புது முறைக்கும் உள்ள தூரம் வடதுருவத்திற்கும் தென்துருவத்திற்கும் உள்ளது போல் என்றால் போதாது. பழைய வாழ்க்கை—உபதேசங்களை ஆசிரியர் குழந்தைக்கு அளிப்பதற்கு மாறாய், குழந்தையே எல்லாருக்கும் ஒரு உபதேசம் செய்யக்கூடியது; முக்கியமாக ஆசிரியருக்கு உபதேசம் செய்கிறது என்கிறார் மாண்டிஸோரி. இது உண்மையானால், பழைய கல்வி முறையும் புது முறையும் இருவேறு உலகங்கள் அல்லவா?

மாண்டிஸோரி முறையில், ஒரு ரோஜா மொட்டு ரோஜாவாக மலர்வதுபோல் குழந்தை மலர்ச்சி பெறுவதைக் கவனிக்கும் அம்மனநிலையே ஆசிரியர் உள்ளத்தில் ஒரு மாறுதலைத் தோற்றுவிக்கிறது. ஆசிரியர் உள்ளொளியால், தாம் அடைந்து வரும் அதிசய மாறுதலால், வாழ்க்கையை அறிந்துகொள்ள ஆரம்பிக்கிறார். இத்தகைய உள்ளறிவு அல்லது. உள்ளொளியால் உயிர் வாழ்வை அறிந்து கொள்ளும்படி அதிசயமாய், மனப் பூட்டைத் திறப்பதற்குக் குழந்தை உதவி செய்கிறது.

'குழந்தையிடம் நாம் கற்றுக்கொள்ள வேண்டும், குழந்தைக் கலையைக் குறித்தும், பொதுவாகக் கல்விமுறையைக் குறித்தும்' என்ற மாண்டிஸோரி-கொள்கை புரட்சிகரமானதில்லையென்றால், வேறொன்றுமே புரட்சிகரமானதில்லை! இது ஒரு புதிய கொள்கை-இப்படிக் குழந்தையைக் கற்பதற்கு ஒரு புதுமைக் கொள்கை மட்டுமென்று, ஒரு புதிய மதம். உலகத்தை இளமையும் அழகும் நிறைந்ததாய்க் காட்டும் மதம்.

தீராத வாழ்க்கைப் பிரசினைகளுக்கெல்லாம் குழந்தையை நோக்கி நோக்கித் திறவுகோல் கண்டு கொள்ளலாம். ஆறுதல் பெறாத உள்ளங்களெல்லாம் குழந்தையை நோக்கி நோக்கி ஆறுதல் பெறலாம். இதற்கு உதவும் மாண்டிஸோரி-முறை வாழ்க்கையின் பல இரகசியங்களையும் திறந்து பார்க்கவும் ஒரு திறவுகோலாக உதவும்.

மாண்டிஸோரியின் மனப்பான்மை—இக்குழந்தைக் கலைஞர், குழந்தையிடம் கொண்டுள்ள பக்தி - மனப்பான்மை—நமது நாகரிகப் போக்கிற்கும் பண்பாடுகளுக்கும் புதிதன்று. "குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே" என்ற தமிழ்ப் பழமொழியிலேயே இம்மனநிலையை ஒருவாறு காணலாம். ஒவ்வொரு குழந்தையிலும் பாலகிருஷ்ணனைக் கொண்டாடும் மனநிலையை ஒத்தது தான் இது. இதைப் புரிந்துகொண்டால் குழந்தைக் கலையில் இயற்கை வழியே சென்று பயன் பெறலாம்.

குழந்தையின் சூழலில் சுதந்திரமும், உத்ஸாகமான உழைப்பும் அவசியமானவை. குழந்தை தன் மனோபாவத்திற்கு இணங்க உத்ஸாகமாய்ச் சுதந்திரமாய்க் கற்கும் கல்விதான் உண்மையான குழந்தைக் கல்வியாகும். இத்தகைய குழந்தைகளே பின்னாளில் உண்மையான ஜனநாயக வாதிகளாகவும் சுதந்திரப் பிரஜைகளாகவும், ஒரு நாகரிக சமுதாயத்தில் கடமைகளோடு உரிமைகளையும் மேற்கொண்டு ஒழுகுவது எளிதாகும்.

குழந்தை யுலகில் அடக்குமுறைக்கு இடமே கிடையாது. மதத்தின் பெயரால் மூடநம்பிக்கைகளைப் புகட்டுவதற்கும் இடம் இல்லை. "உயிர்க்குலம் ஒரு திட்டப்படி வளர்ச்சி பெற்று வருகிறது; மனிதன் ஒத்துழைக்க வேண்டும். உயிரிடம், வாழ்க்கையிடம் பக்திவேண்டும்; மானுடத்தின்மீது பேரன்பு வேண்டும்" என்ற அறிவைக் குழந்தைகள் மனோபாவத்தால் அடைவது அரிதன்று. நாம் வாழும் பிரபஞ்சக் காட்சிகளையும் விஞ்ஞான மர்மங்களையும் குழந்தை - மனோபாவம் உத்ஸாகமாய்த் தெரிந்துகொள்ளும். இம்முறையில் பயிற்சிபெற்ற குழந்தைகள் பின்னாளில் நிறத்துவேஷம் சாதித்துவேஷம் முதலான குறைகள் இல்லாமல் நிறைந்த வாழ்வும் பிறரோடு ஒன்றுபட்ட வாழ்வும் வாழ்வது எளிதாகும். இது மாண்டிஸோரியின் நம்பிக்கை.

தமது அன்பினாலும் உள்ளொளியாலும் மாண்டிஸோரி குழந்தை - ஆத்மாவைக் கண்டுகொண்டிருக்கிறார். இந்த அறிவும் பயிற்சிமுறையும்தான் உலகத்திலே சமாதானத்தையும் கவலையற்ற வாழ்வையும் நிலைபெறச் செய்யும் என்பது இவ்அம்மையாரின் அசையாத நம்பிக்கை.

மாண்டிஸோரி அம்மையாருக்கு இப்போது வயது எழுபத்தெட்டு. எத்தனையோ இடையூறுகளுக்கு இடையே இம்முதிர்ந்த வயதிலும் தான் கண்ட புதிய உலகத்தைப் பிறரும் கண்டு இன்புற வேண்டும் என்று பாடுபட்டு வருகிறார். குழந்தை யுள்ளத்திலே அதி சூட்சும நிர்வாக சக்திகளும் அறிவுத் திறமையும் வாய்ந்த ஓர் ஆன்மா மறைந்திருக்கிறது என்ற உண்மையைக் காண்பவர்களே மாண்டிஸோரி காட்டும் புதிய கல்வி யுலகத்தைக் கண்டுகொள்ள இயலும்.

குழந்தை தானாகவே, வளர்வது போலவே, தன்னுடைய அந்தரங்க சக்திகளையும் வெளியிடுகிறது. அப்படிக் குழந்தை வெளியிட்டால் அன்றி, நாம் குழந்தை - ஆன்மாவின் இரகசியத்தை உணர்ந்துகொள்ள முடியாது. இவ் உண்மையை உணர்ந்துகொண்டால்தான்

மாண்டிஸோரி அம்மையின் புதிய உலகம் புலனாகும்.

மாண்டிஸோரி தமது கல்விமுறையைக் கல்விமுறை என்றே ஒப்புக்கொள்வதில்லை. குழந்தை - ஆன்மாவின் ஆழத்திலிருந்து வெளிப்பட்டு எழுந்து தமக்கு இலக்காகிய, புலனாகிய, ஓர் உபதேசத்தை உலகத்திற்குத் தாம் வெளியிடுவதாகவே இவர் கூறுகிறார். இதுதான் இவர் காட்டும் புதிய உலகம்.

குழந்தைகளே நமது சுயநலம் முதலான குறைகளைப் போக்கி இதயமாற்றத்தை ஏற்படுத்தி வாழ்க்கையை அன்புமயமாக்குகிறது, ஆனந்த மயமாக்கவும் வல்லது. இந்த இதயமாற்றம் நிலைபெற வேண்டுமென்றும், இதற்காகக் குழந்தைக்கே ஆசிரியனது வாழ்க்கை அர்ப்பணமாக வேண்டுமென்றும், இந்தக் குழந்தைப் பணியில் பணிவு முக்கியமென்றும், செருக்கிற்கு இடமே கிடையாதென்றும் மாண்டிஸோரி சொல்லுகிறார். இந்நிலை இவர் காட்டும் புதிய உலகத்தை நாமும் காண்பதற்குத் துணையாகிறது.

அன்பைக் கற்பிக்கும் குழந்தை, தனக்கு உரிய குழந்தைக் கலையைப் பற்றியும் கற்பிக்கிறது என்கிறார் மாண்டிஸோரி. இதையறிந்து நாம் குழந்தையுடன் ஒத்துழைக்க வேண்டும் என்கிறார். தூய அன்பின் ஆரம்ப ஒளியைக் குழந்தையின் வாயிலாகக் கண்டு இந்த அன்பின் ஜோதியைத் தூண்டி வளர்க்க வேண்டுமென்கிறார். இது லேசான காரியமா? இதுதான் கல்வியின் காரியம், இதுதான் உண்மையான கல்வி, குழந்தைக்கும் கற்பித்து முதியவரிடத்திலும் மாறுதல் உண்டாக்கத் தக்க கல்வி என்கிறார்.

பள்ளிக்கூடங்களில் போட்டிகளையும் பரீட்சைகளையும் பரிசு முறைகளையும் மாண்டிஸோரி அங்கீகரிக்கவில்லை. இந்தப் போட்டி பூசல்களும், உத்தியோக வேட்டைகளும், முதியவர்களின் பேராசைகளுக்கும் சுயநலங்களுக்கும் சண்டை சச்சரவுகளுக்கும் காரணமாகின்றன என்பது மாண்டிஸோரியின் அபிப்பிராயம். குழந்தையின் இயற்கையான அறிவு - வளர்ச்சிக்கு உதவிசெய்வதற்கு மாறாகத் தற்காலக் கல்விமுறை இடையூறு விளைக்கிறது என்கிறார். சுருங்கச் சொன்னால், "குழந்தைகளின் பிரம்மா நாமல்ல; அந்தப் பிரம்மா குழந்தையுள்ளத்திலேயே உள்ள சிருஷ்டி - சக்திதான்!" என்கிறார். "சின்னஞ்சிறு குழந்தைக்கும் மானஸ வாழ்வு உண்டு; குழந்தைச்சட்டை போர்த்து வந்திருக்கும் ஆன்மாவே அது" என்கிறார். குழந்தை யுருவில் நமக்கு உதவிசெய்ய வந்த கிறிஸ்து அல்லது கண்ணனாக ஒவ்வொரு குழந்தையையும் மதிக்கும் ஆசிரியன்தான் உண்மையான குழந்தைக் கலைஞன் என்பது மாண்டிஸோரியின் கொள்கை. உண்மையாகவே இது ஒரு புதிய கல்வியுலகமல்லவா?

முதற் பரிசு

"கோபால ராஜம்"

"ஓஹோ! நீங்கள் சொல்வதைப் பார்த்தால், என்னுது வேறே, ஒங்குளுது வேறேன்னு, இந்த வீட்டிலே இருக்காப்பலே இருக்கு! அப்படி, வித்தியாசம் பாராட்டிப் பேசித்தான், நம் கதி இப்படியாச்சு" என்று அழுது கொண்டே பதிலளித்தாள் அரங்க நாயகி, உத்திரியத்தைக் கொடுத்துவிட்டு!

"கோபம் மாத்திரம் வந்து என்ன பிரயோஜனம்? குணம் அல்லவா வேண்டும்? அழுகை வந்து என்ன பிரயோஜனம்?" என்று சொல்லிக்கொண்டே, அவள் கொடுத்த ஜரிகை உத்தரியத்தை உதறி, மேலே போட்டுக்கொண்டு, வெளியே போய்விட்டான் வரதராஜன்.

அலைகள்போல் அவன் மனத்தில் பல விதமான எண்ணங்கள் தோன்றி, மறைந்தன. "ஆம், நாம் சொன்னது அவள் மனத்தைப் புண்படுத்தியிருக்கலாம், அவள் அவ்விலையுயர்ந்த ஜரிகை அங்கவஸ்திரத்தை, எனக்கு அன்பாய்த் தான், தன் தகப்பனுரைக் கேட்டு வாங்கிக் கொடுக்கச் சொன்னுள். இப்போதைய விலைக்கு, ரூபாய் இருநூறுக்கு மேலிருக்கும். ஆனல், அவள் ஒருநாள் நான் அதை மேலே போடப்போனவுடனே, சொன்ன வார்த்தைகள்—"

"க்றீச்" எனும் சத்தத்துடன், "தடதட" வென வந்து கொண்டிருந்த டிராம் வண்டி நின்றுவிட்டது! யாரோ தன் பின்னல் தோளைப் பிடித்துக் குலுக்கி, "என்னடா வரதா! எங்கேயோ யோசனை பண்ணிண்டு, எதிரில் வந்த டிராம் வண்டியில் போய் மோதிக்க இருந்தாயே! நல்ல வேளையாய் நிறுத்திவிட்டான்! தெருவில், கண்களைத் திறந்துகொண்டு நடடா" என்று பரிகாசமாய்ப் பேசியவுடன், விழித்துக் கொண்டான் வரதன்.

"வாடா, கணேஷ்! எந்தப் பக்கம் போறுய்?" எனக் கேட்டுக்கொண்டே கடற்கரையை நோக்கிச் சென்றனர்.

கும்பல்கும்பலாய்க் கூடிக்குலாவி அளவளாவி, அன்பு ததும்ப இன்பப் பேச்சுக்கள் பேசி ஆனந்திக்கும் தம்பதிகள் ஓர் புறம், கடலின் இரைச்சலை விரட்டும் விளையாட்டுச் சிறுவர்கள் ஓர்புறம், பல விதமான தின்பண்டங்களை விற்றுக் கொண்டே, மணலில் அங்கு மிங்கும் ஓடும் மனிதர்கள் ஓர்புறம்; நூதனப் பிச்சைக்காரர்களின் நேர்த்தி ஓர் புறம். நீலக்கடலும், நிறைமதியும், நிலவின் ஒளியும், நித்தியானந்தமும் வரதனின் மனதில் வனிதாமணி அரங்கநாயகியை அமரச் செய்தது. சிந்தனையுலகில் சிறிதுநேரம் மறுபடியும் சஞ்சரித்தான்:

"ஆம்! இவ்வுலக வாழ்வே ஓர் மாயை! வாழ்க்கைத் தோணியை நடத்த வந்த வனிதாமணி பொருத்தி, காலத்தின் போக்காலோ, அல்லது நயமாய்ப் பேசிப் பிறர் கலைக்கும் துர்ப்போதனையாலோ, அல்லது போராத காலம் என் பார்களே அவ்விதக் காலத்தாலோ, அல்லது நாகரிக முன்னணியில் சஞ்சரிக்கும் காலத்தாலோ, எக்காரணத்தாலோ, கணவனைத் தூஷித்துக் கொடிய குணமுள்ளவளாகமாறி, பொருத்தமற்ற வாழ்வும் நிம்மதியற்ற கோலமும் கொண்டு வாழ்க்கைத் தோணியைப் பெரும் புயல்களுக் கிடையே சிக்க வைத்து, அமைதியற்ற அவதியாக்கிவிடுகிறுளன்றே!"

"வரதா! நாழியாச்சடா, வரவில்லையா?" என்று கணேஷ் மறுபடி அவனைக் கூப்பிட்டவுடன், சிந்தனையுலகினின்றும் விடுபட்டு, வரதராஜன் தன் நிலைக்கு வந்தான். "நான் கொஞ்சம் வேலையாய்க் கடைத்தெருவுக்குப் போக வேண்டும்" எனச்சொல்லி, வேறு பக்கமாய்ச் சென்று விட்டான்.

2

தனியாய் விடப்பட்ட அரங்கநாயகி, தன் கணவன் கோபமாய் வீட்டைவிட்டு வெளிச் சென்ற பிறகு சற்று யோசித்தாள்! "ஆம், குற்றம் என்மேல்தான்! நான் ஏன் அவருக்கு வருத்தம் உண்டா

குமாறு அன்று அவ்விதம் சொன்னேன்? எனக்கு ஏன் இப்படிப் புத்தி கெட்டுவிட்டது? எனக்கு நல்லகாலம் வந்தால், எல்லாம் நன்மையாயிருக்கும்! நிம்மதியாய், குதூகலமாய், அவர் என்னுடன் எவ்வளவு அன்பாயும், சரசமாயும் இருந்து வந்தார்! குடித்தன மும் நிம்மதியாய், திருப்தியாய் நடந்து வந்தது. எனது கஷ்ட காலந்தானே நான் புத்தி கெட்டு, அவரையும் அலட்சியம் செய்து, அவமதித்தேன்! அதனல் வந்த மாறுதல் இன்னும் கொடிய கஷ்டத்தையன்றோ கொடுத்தது, இவ்வுலகில்? ஒற்றுமையைக் கெடுக்கப் பலர் உதவி செய்தார்களே யன்றி, நற்புத்தி புகட்டி நன்ருய் இருப்பதைப் பார்க்கச் சகியார்! நாவினல் சுட்ட வடு நாட்கள் பல ஆனலும் ஆருதன்றோ! நான் ஒருநாள், "வெக்கமில்லாமே, எங்கப்பா வாங்கிக் கொடுத்த ஜரிகை வேட்டியைப் போட்டுண்டு ஜோராகக் கிளம்பியாச்சு! எனக்கு ஒரு நல்ல புடவை வாங்கித்தாதுன்னு—" வென்று முடிப்பதற்குள் அவர் விட்டை விட்டுப் போய்விட்டார். அடக்கமின்றி வீண் வம்பினல் வந்த துணிச்சலன்றோ என்னை அப்படி அவமரியாதையாய்ப் பேசப் பண்ணிற்று? இனி, அவரையும் விரோதித்துக் கொண்டோம்—"

* * * •

திடமனதுடன் எழுந்தாள். கணவன் வீடுதிரும்பும் வேளையை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். கணவனைக் காரணமின்றிக் கவலைக் குள்ளாக்கியதற்குக் கலங்கினள்.

3

அவனும் வந்தான், உள்நுழைந்தான். தனது ரூமுக்குச் சென்று, நாற்காலியில் சாய்ந்தான். கூடச் சென்றுள், அரங்க நாயகி, கையில் ஏந்திய "காப்பி"யுடன்! புன்முறுவல் முகத்தில் தவழ, துக்கம் தொண்டையை வந்து தொட, கண்ணீர் கண்களில் உதிர,

"இந்தாங்கோ! நான் தெரியாமல் சொல்லிவிட்டேன்; நீங்கள் அன்று முதல் மாறிவிட்டீர்கள்! உன்னுது, என்னுது என்று பிரித்துப்பேசவும் துணிந்து விட்டீர்கள்! கோபிச்சுக்காதேங்கோ! எனக்கு யார் தைரியமாய் எதித்துப் பேச நயவஞ்சகமாய்ச் சொல்லிக் கொடுத்தாளோ, அவளை இனி பாக்கவே மாட்டேன்! நீங்களும் இப்படி எனக்கு விரோதமாப் போய்ட்டா, நான் என்ன பண்ணுவேன்?" என்று சொல்லிக்கொண்டே காப்பியைக் கொடுத்தாள். மௌனம்!

மாய மாறுதல் வரதன் மனதைச் சந்தோஷிக்கச் செய்தது. இளக வைத்தது. "எழுந்திரு! சமத்தாயிருந்தால் சரிதான்" என்று அன்போடணைத்து, கையில் கொண்டுவந்த சிறிய பார்ஸலைக் கொடுத்தான்.

புளகாங்கித மடைந்து, பிரித்துப் தாள் அதை. ஆச்சரியம்! ஒவ்வொரு நாளும் அவளை எந்தப் புடவை வேண்டுமென்று துன்புறுத்தி வந்தாளோ, அதே கலர்ப்புடவை, கண்ணைக் கவரும் பார்டர், கலரும் அதற்குமேல்!

"ஏன்னு! நெஜமா, எனக்கா? "மர்சக் கடசிலே, ஏது பணம்? கடன், கிடன் வாங்கிண்டு வந்துட்டேளா

5

என்ன, ஏன்னு?" என்று அளவு கடந்த ஆவலுடன் கேட்டாள் அரங்கா.

"இல்லே! உனது குணம் மறுபடியும் மாறிப் பழையபடி நீ 'பழைய ரங்கா'வாக மாறிவிட்டாயே! அதற்குப் பரிசு! ஒற்றுமை வாழ்வின் முதற் பரிசு! நான் எழுதிய பற்பல கட்டுரைகளில் ஒன்று முதற் பரிசு பெற்றது! என் முதற் பரிசு உனக்கு முதற் பரிசாய் உடனே உனக்குப் பிடிச்ச புடவையாயிற்று! என்ன, மலைக்கிருய்?" என்று அன்புடன் அவள் துன்பத்தைப்போக்கி, புன்முறுவலுடன் வீற்றிருந்தான்.

புளகாங்கித மடைந்த அரங்கநாயகி "எழுதுங்கோ! நன்னு, நறைய எழுதுங்கோ! அவாளெல்லாம், நன்னயிருக்கணும். நான் இனிமே புத்தியுள்ளவளாய்ட்டேன்" என்று, கையில் ஏந்திய கலர்ப்புடவையுடன் கணவனைக் களிப்புடன் நோக்கினள். கண்களில் ஆனந்தக் கண்ணீர்!!

சோம்பேறி மூத்தன்

(ராஜா)

—○—

ஊரும் எறும்பே ! ஒருமணி நேரம்
ஒளித்து விளையாட வாராயோ ?
நேரமில்லை,மழைக் காலம் நெருங்குமுன்
நெல்மணி சேர்த்திட வேண்டுமப்பா ! (1)

மாமலர் தோறும் திரியும்வண் டே ! பாண்டி
வட்டாட என்கூட வாராயோ ?
ஆமோ? இவ் வேளை அலர்மலர் மூடுமுன்
அள்ளித்தேன் சேர்த்திட வேண்டுமப்பா ! (2)

காகமே ! கால்மணி நேரம் என்னோடு
களித்து விளையாட வாராயோ ?
ஆஹா ! நேரம் எனக்கில்லை அப்பா ! - மழைக்(கு)
ஆம்கூடு கட்ட வேண்டுமப்பா ! (3)

ஓடுசிற் றாறே ! ஒருநிமி ஷம்விளை
யாட உவந்துநீ வாராயோ ?
நாடு செழிக்கநன் னீர்விட வேண்டும்என்
நண்பனே ; போதெனக் கில்லையப்பா ! (4)

வானத்து லாவிடும் சூரிய னே ! கீழே
வந்து விளையாட வாராயோ ?
போனகம் கொள்ளவும் நேரமில்லை ; புத்தி
கெட்டபையா ! வர மாட்டேனப்பா ! (5)

ஓகோ ! இதுவென்ன ? ஒருவரும் என்கூட
ஓடி விளையாட வாராரோ ?
ஆகாத பிள்ளையோ ? நான்மட்டும் அந்தப்பேர்
அண்டாமல் பார்த்திட வேண்டும் இனி ! (6)

ஆண்டாள்

(நெ. நே.)

கதையும் உட்பொருளும்

வழக்கம்போல் பெருமாளுக்கு மாலை கட்டுவதற்காகப் பூக்களையும் துளசி இலைகளையும் கொய்துகொண்டு வருகிறார் பெரியவர் நந்தவனத்திலே. 'இன்னும் சூரியன் உதிக்கவில்லையே. இவ்வளவு வெளிச்சத்திற்குக் காரணம் என்ன?' என்று பிரமிக்கிறார். அங்கும் இங்கும் கவனமாய்ப் பார்க்கிறார். சோலையின் ஒரு பக்கத்திலே துளசி பச்சைப் பசேலென்றுசெழித்துக்காடாகக் கிடக்கிறது. அந்தச் செடிகளுக்கிடையேபளிச்சென்று தங்கத்தை உருக்கிவிட்டதுபோலிருக்கும் ஒரு பெண் குழந்தையைப் பார்க்கிறார். அங்கே – என்ன ஆச்சரியம்! "பூமிதேவிதான் தன் இயற்கை அழகுகளுக்கிடையே இப்படி வடிவங்கொண்டாளோ?" என்று திகைத்து நிற்கிறார் கொஞ்சநேரம். பிறகு குழந்தையை அணைத்துக்கொண்டு, "இன்று பகவானுக்குக் கிடைத்த அற்புத மலர் இது!" என்று ஆனந்தமடைகிறார்.

இந்தப் பெரியவர் பெரியாழ்வார். இவரால் புத்திரியாக வளர்க்கப் பெற்ற இந்தக் குழந்தைதான் 'கோதை' என்றும், 'ஆண்டாள்' என்றும் பிரசித்திபெற்ற பக்த மணியார். கோதை அந்த ஸ்வீகாரத் தந்தையிடத்திலேயே கல்வி கற்று ஞானசுந்தரியாக விளங்கினாள், அவரோடு நந்தவனம் போய்ப் பூ எடுப்பாள். செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுவாள். தந்தை உருக்கமான பாடல்கள் பாடிப் பக்தி பண்ணுவதைக் கவனித்துக் கொண்டிருப்பாள். பாடிக்கொண்டே தந்தையும் வேறு பக்தர்களும் பஜனை பண்ணுவதையும் பார்த்துக்கொண்டிருப்பாள். தானும் அவர்களைப்போல் பக்தி பண்ணுவாள். பஜனைகளிலும் கலந்துகொள்வதுண்டு. இப்படிக் குழந்தைப் பருவமுதல் இவளுடைய விளையாட்டுகள், ஆசைகள், கருத்துகள், லட்சியங்கள், எல்லாம் பக்தி மயமாகவே இருந்தன. பெரியாழ்வாரைப்போல் இவளுக்கும் கவித்வ சக்தி இருந்தது. கற்பனைக் கண் இருந்தது. இயற்கை யழகுகளிலெல்லாம் கோதையும் அழகனான கிருஷ்ணனைக் கண்டாள். இவளும் பகவானிடம் காதல் கொண்டாள்.

ஒருநாள் நந்தவனத்திலே தருவைச் சுற்றிப் படர்ந்திருந்த பூங்கொடி ஒன்றைக் கண்டதும், தான் படர்வதற்கு வேண்டிய தருவைத் தேடியது இவள் உள்ளமும். ஆனால் அந்தக் காதலனை எங்கே காண்பது? கோதை விம்மினாள்; பெருமூச்சு விட்டாள். தன் நெஞ்சை அந்த அருமைத் தந்தைக்கும் தெரியாமல் ஒளித்து வைக்க முயன்றாள். அவர் இல்லாத சமயம் பார்த்துக் கோதை உயர்ந்த ஆடை ஆபரணங்கள் அணிந்து பூக்களாலும் தன்னை அலங்கரித்துக் கொண்டு, 'அவன் அழகுக்கு ஒத்திருக்குமோ?' என்று கண்ணாடியில் பார்த்துக்கொண்டாள். பெரியாழ்வார் அந்த ஊர்ப் பெருமாளுக்காகத் தாம் கட்டிய பூமாலைகளை ஒரு கூடையில் வைத்து விட்டு வெளியே போவது வழக்கம். அப்போது கோதை அந்த மாலைகளையும் எடுத்தெடுத்துத் தன் கூந்தலில் சூட்டி அழகு செய்துகொண்டு கர்வத்தோடு கண்ணாடியில் தன்னைப்பார்த்து மகிழ்வாள். ஆயினும் 'தகப்பனார் எங்கே வந்துவிடுவாரோ?' என்று விரைவில் கசங்காமல் எடுத்து, முன்போல் கூடைக்குள் வைத்துவிடுவாள். இப்படிப் பல தினங்களாக நடந்து வந்தது.

ஒருநாள் கோதை அழகான ஒரு நீலப் பட்டை உடுத்துக்கொண்டாள். அந்தப் பட்டைத்தான் எத்தனை தரம் உற்றுநோக்குவாள். அந்த நிறத்திலே அவ்வளவு மோகமா? ஆம், காதல

னுடைய நீலமேனியை ஞாபகப்படுத்துகிறதல்லவா? உள்ளம் குளிர்ந்து, என்னென்னவோ எண்ணிவிட்டு வழக்கம் போலத் தந்தை கட்டிவைத்திருந்த அழகான மாலைகளை அழகாய்ச் சூடிக்கொண்டு கண்ணாடிக்கு எதிரே வந்தாள். அதே சமயத்தில் பெரியாழ்வார் தற்செயலாகத் திரும்பி வந்தார். "அம்மா, இந்தச் செய்கை செய்ய உன் மனம் எப்படித் துணிந்ததோ?" என்று பதறினார். 'ஐயோ, அவர் வருத்தப்படுகிறாரே!' என்று கோதை விம்மி விம்மி அழத் தொடங்கினாள். எனினும் தான் செய்தது தகாத செயல் என்று நினைக்கவில்லை. தலைகுனிந்து, "நான் அவனுடைய காதலி அல்லவா?" என்று மெல்லச் சொன்னாள். காதலனுக்கு உரிய மாலைகள் காதலிக்கும் உரியன என்று எண்ணம். பக்த சிரேஷ்டரான பெரியாழ்வாருக்கும் ஆச்சரியமாயிருந்தது இந்த மனநிலை.

ஆழ்வார் மறுபடியும் பூக்கொய்து புதிய மாலைகள் தொடுத்துக்கொண்டு கோயிலுக்குப் போனார். ஆனால் அன்றிரவு கனவிலே பெருமாள் தோன்றி, "இன்று நமக்கு மணமில்லாத மாலைகளைச் சாத்தினீரே! உம்முடைய மகளை நீர் அறிந்து கொள்ளவில்லை. அவள் நமக்குப் பூமாலை குடிக்கொடுக்கவும் பாமாலை பாடிக்கொடுக்கவும்தானே பிறந்திருக்கிறாள்" என்று சொல்லி மறைந்துவிட்டாராம். நித்திரை கலைந்து எழுந்ததும் பெரியாழ்வார் தம் மகளைப் பார்த்து, 'என்னை ஆண்டாள் இவளே!' என்று ஆனந்தக் கண்ணீர் ததும்பச் சொன்னார். அதுமுதல் கோதைக்கு, 'சூடிக்கொடுத்தாள்' என்ற பெயரும், 'ஆண்டாள்' என்ற பெயரும் வழங்கலாயின.

பெரியாழ்வாரும் பகவான்மீது பக்திக் காதல் கொண்டவர்தான். கண்ணனுடைய அழகிலே மோகித்துப் போனவர்தான்.

> குன்றாடு கொழுமுகில் போல்
> குவளைகள்போல், குரைகடல்போல்,
> நின்றாடு கணமயில்போல்,
> நிறமுடைய நெடுமால்......

என்றெல்லாம் கண்ணனுடைய அழகிலே ஈடுபட்டு மோகித்துப் போகிறார்.

கோதையின் பக்தியோ காதல்—வெறிதான்;

> பெய்யும் மாமுகில் போல் வண்ணா! உன்தன்
> பேச்சும் செய்கையும் எங்களை
> மையல் எற்றி மயக்க உன் முகம்
> மாய மந்திரம் தான் கொலோ?

என்றெல்லாம் பாடுகிறாள்.

பெரியாழ்வாரைப்போல் இயற்கை—அழகுகளில் கண்ணனைக்கண்ட கோதை, அந்த அழகனைத் தனக்குக் காதலனாக்கிக் கொள்கிறாள். பெரியாழ்வாருடைய பக்திக் காதலைத் தாயின் அன்புடன் ஒப்பிட்டால், கோதையின் பக்திக் காதலைக் காதலர்களின் காதல் - வெறியுடன்தான் ஒப்பிடவேண்டும். தாயன்பு, அளந்து ஆழம் காணமுடியாத கடல்; சாந்தமான-பரிசுத்தமான-ஒளிமயமான சமுத்திரம். இந்த அன்புப் பெருங்கடலில் விளைந்த முத்துக்கள் மெரியாழ்வாரின் பக்தி—அனுபவங்களும் பாடல்களும். கோதை-காதலோ புயல் - காற்றிலே கொந்தளிக்கும் கடல். பெரியாழ்வாருக்குச் சொந்தமான பக்தி - அனுபவங்களையும் கடந்து பொங்கிவிட்டது கோதையின் காதல் - வெள்ளம்.

பெரியாழ்வாரைப்போல் கோதையும் பகவானுக்குப் பாமாலை சூட்டினாள். பூமாலையையும் சூட்டிக் கொடுத்தாள், பெரியாழ்வாரும் திகைத்துத் திகிலடையும்படி!—என்று சொல்லுகிறது கதை. 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி' என்று ஸ்ரீ வைஷ்ணவ உலகம் கோதைக்குப் புகழ்மாலை சூட்டியிருக்கிறது. பகவானே 'சூடிக்கொடுத்த நாச்சியார்' என்று பாமாலையும் பூமாலையும் தனக்குச் சூடிக் கொடுத்த இந்தக் காதலியைக் காதலித்து மணந்து கொண்டானாம்.

'என்னை ஆண்டாள் இவளே! என்று பெரியாழ்வாரே இந்த அருமைத் திருமகளைப் போற்றினாராம். 'பக்திக் காதலால் நம்மையெல்லாம் ஆண்டாள் இவள்' என்று வைஷ்ணவ உலகம்போற்றுகிறது. பெரியாழ்வாரே, "என்னுடைய பக்தி

பாடுபட்டுத் தேடிய பொருள் ; இவளுடைய பக்தியோ புதையலெடுத்த பொருள் " என்று சொல்லிவிட்டாராம்.

புருஷோத்தமனால் கண்ணனுக்கே மாலையிட வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்த ஆண்டாள், ' அந்த அவதார காலத்தில்தான் பிறக்கவில்லையே !' என்று வருந்தினார். கண்ணன் விளையாடிக் கொண்டிருந்த யமுனை ஆற்றங் கரையைப் பார்க்கவும் இந்தத் தமிழ்ப் பெண்ணுக்கு வசதி ஏற்படவில்லை. எனவே தான் பிறந்த ஸ்ரீ வில்லிபுத்தூரைக் கோகுலமாகவும், தன்னைக் கோபிகா ஸ்திரீகளில் ஒருத்தியாகவும் பாவனை செய்துகொண்டாள்.

கிருஷ்ணபக்ஷத்துக் காலைச் சந்திரிகையில் மார்கழி - நோன்பு நோற்றுக் கண்ணனை அடைய வேண்டுமென்று புறப்பட்டார்கள் ஆயர்பாடிக் கோபிகைகள். அவர்களுடன் - ஆண்டாளும் புறப்படுகிறாள், யமுனை நோக்கி. அந்த ஆய்ச்சிகளோடு சேர்ந்து நடந்து கண்ணனுடைய அருளைப் பாடிக்கொண்டு போகிறாள். அவர்களுடைய சம்பாஷணைகளிலும் பரிகாசப் பேச்சுகளிலும் கலந்து கொள்கிறாள். ஆய்ச்சியர் தயிர் கடையும் ஓசையைக் காதில் போட்டுக் கொண்டு, குடங் குடமாகப் பால்கறக்கும் பசுக்களையும் பார்த்துக் கொண்டே போகிறாள்.

மார்கழி நோன்பை அனுஷ்டிக்கும் ஆண்டாளின் உள்ளமும், அந்தக் கோபிகைகளின் உள்ளங்களைப்போல் கண்ணன் - காதலால் தவித்துக் கொண்டிருந்தது. கண்ணனுடைய அருள் அந்தக் கோபிகாஸ்திரீகளின் உள்ளங்களிலே மழைபோல் இறங்கி வந்ததாம். அப்படியே ஆண்டாள் உள்ளத்திலும் அந்த அருள்மழை இறங்கிவந்தது.

கிருஷ்ணாவதாரத்திற்கு எவ்வளவோ காலத்திற்குப் பிற்பட்டவளாக இருந்த போதிலும் பாவனாசக்தியின் முதிர்ச்சி

BOOKS

BY

K. S. VENKATARAMANI

	Rs.	A.
(Just Published)		
My Ashram Plan for Rural uplift ...	1	8
Kandan, The Patriot (A Novel of New India in the Making) Second Edition	3	0
On the Sand-Dunes (Musings of Life in free Verse) Second Edition	1	0
The Indian Village (A Ten year Plan) Second Edition	0	12

SVETARANYA ASHRAMA

MYLAPORE :: :: MADRAS

யால் ஆண்டாளின் உள்ளம் காலவெள்ளத்தை எதிர்த்து நீந்திப் போய் ஆயர்பாடியில் குடியேறிவிட்டது. இந்த நிலையிலே தான் மார்கழி நோன்பாகிய பாவை நோன்பைக் குறிக்கும் திருப்பாவை என்னும் இசைத் தமிழ் பிறந்தது. கண்ணன் மீதுள்ள பிரேமையால் உடலுணர்ச்சியையும் உலக உறவுகளையும் மறந்து வாழ்ந்த கோபிகா ரமணிகளின் அனுபவத்தை ஒட்டித் தன்னுடைய காதல்–அனுபவங்களையும் ஆண்டாள் வெளியிட முயன்றிருக்கிறாள், திருப்பாவை என்ற முப்பது பாசுரங்கள் வாயிலாக, இப்பாடல்களைக் குறித்து, பக்தர்களான ரஸிகர்கள், "கோதைதமிழ்-ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை-வையம் சுமப்பதும் வம்பு" என்று புகழ்ந்திருக்கிறார்கள்:

கோபிகாரமணிகளுக்குக் கண்ணன் எப்படிப் பிரத்தியட்சமாக இருந்தானோ, அப்படியே தன்னுடைய அக உலகிலே கோதையும் கண்ணனை முகமுகமாசச் சந்தித்தாள்; அவனோடு கொஞ்சிக் குலாவினாள். 'அவன் முகம் காட்டிப் புன் சிரிப்பும் காட்டினான்!' என்று பாடியிருக்கிறாள். அவன் சொன்ன வார்த்தையையும் 'மெய்ம்மைப் பெரு வார்த்தை' என்று பாடுகிறாள்.

சில சமயங்களில் இவளுடைய அழகுத் தெய்வம் முறுவல் செய்வதுமில்லை, முகம் காட்டுவதுமில்லை. அவனை மறந்து பிழைக்கவும் வழியில்லாமல் அவன் தன் உள்ளத்திலே - நினைப்பிலேயே - வந்து புகுந்துகொண்டு தன்னை ஹிம்ஸிக்கிறான் என்றும் பாடியிருக்கிறாள்.

“இப்படித் துடிக்க விடுவதும் அவனுக்கு ஒரு பொழுது போக்கா?” என்று காதலி வருந்தும்போது, நந்த வனத்திலே விருட்ச ஜாலங்களுக்கிடையே குயில் கூவிக்கொண்டிருந்தது காதில் விழுந்தது. “குயிலே, குயிலே! என் கண்ணனை எப்படியாவது நீ உன் இனிய பாஷையிலே அழைக்க வேண்டும்” என்று கேட்டுக்கொள்கிறாள். மலர்ந்திருக்கும் முல்லைப் பூக்கள் கண்ணனுடைய புன்னகையை ஞாபகப்படுத்தின. முல்லைப் பூவை “முல்லைப் பிராட்டி” என்று போற்றி அழைத்து, “நீ உன் புன் சிரிப்பால் எனக்கு அல்லல் விளைவிக்க வேண்டாம்” என்று பிரார்த்திக்கிறாள்.

பூக்கள், கனிகள், பட்சி ஜாலங்கள் - ஏன், எல்லா இயற்கை அழகுகளும் - கண்ணனுடைய திவ்ய சௌந்தரியத்தை கோதைக்கு ஞாபகப்படுத்திய வண்ணம் இருந்தன. அந்த அழகின் கூறுகள் தாமே அவை? தன் புருஷோத்தமனைக் கோதை இம் மண்ணுலகின் அழகுகளிலும் கண்டு கொண்டாள், விண்ணின் அழகுகளிலும் கண்டுகொண்டாள். குயில் முதலான பறவைகளைப் போல், மேகங்களையும் தூது அனுப்பி வைத்தாள், தன் தெய்வக் காதலனிடம்.

இத்தகைய மனநிலை வாய்ந்த கோதையின் வேதாந்தத்திலே, மற்றப் பெண்களைப்போல் இவளும் இல்லற வாழ்க்கை நடத்துவதற்கு இடம் ஏது? “இவளுடைய புத்திக்கும் பக்திக்கும், குணத்திற்கும் அழகிற்கும் ஏற்ற புருஷனை, எங்கே எப்படிக் கண்டு பிடிப்பது?” என்ற எண்ணத்துடன் பெரியாழ்வார் இவளை நோக்கி, “அம்மா! நீ யாரை மணந்துகொள்ள விரும்புகிறாய்?” என்று மெள்ளக் கேட்டாராம். கோதை கலங்கிய உள்ளத்தோடும் கண்களோடும் அப்படியே எழுந்து போய்விட்டாள். சில நிமிஷங்களில் வீட்டுக்குள்ளேயிருந்து வேணுகானம் போன்ற குரலில்,

“ வானிடை வாழும்அவ் வானவர்க்கு
மறையவர் வேள்வியில் வகுத்தஅவி,
கானிடைத் திரிவதோர் நரிபுகுந்து
கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப,
....
....
மானிட வர்க்கென்று பேச்சுப்படில்,
வாழக்கில்லேன், கண்டாய் மன்மதனே!”

என்று மன்மதனை நோக்கிப் பாடிய பாட்டு, பெரியாழ்வார் காதில் விழுந்ததாம்.

“இவள் பகவானைக் காதலிப்பது சரிதான். ஆனால் அந்தப் புருஷோத்தமனுக்கு இந்தத் திருமகளை எப்படி

மணம் செய்து வைப்பது?" என்று பெரியாழ்வார் கவலைப்பட்டார். கோதையோ அவனையே காதலித்தாள், அவனைத்தான் கல்யாணம் செய்துகொள்ள விரும்பினாள். ஆம், உலகில் இல்லாத அந்தப் புருஷோத்தமன் இவள் அகக் கண்ணுக்கு இலக்காகி விட்டான்.

எழிலுடைய அம்மனைமீர்
என்அரங்கத்து இன்னமுதர்,
குழலழகர், வாயழகர்,
கண்ணழகர், கொப்பூழில்
எழுகமலப் பூஅழகர்
எம்மானார், என்னுடைய
கழல்வளையைத் தாமும்
கழல் வளையே ஆக்கினரே

என்பது போன்ற பாடல்கள், கோதை புருஷோத்தமனைக் கண்டு காதலித்தாள் என்பதற்கு அருமையான சாட்சிகள்.

சாதாரணமான காதல்-நெறியே துன்பமும் இடையூறும் பொருந்தியதென்றால், ஆண்டாள்-காதல் எவ்வளவு பெருந்துன்பத்தைக் கொடுத்திருக்கும்! 'ஆயர்பாடிக்கு அணிவிளக்'காக விளங்கிய பெருமான் இவளுக்கு 'அல்லல் விளைத்த பெருமா'னாகவும் காட்சி தந்தான்.

உள்ளே உருகி நைவேனை,
'உளளோ ? இலளோ ? ' என்னாத
கொள்ளை கொள்ளிக் குறும்பனைக்
கோவர்த் தனனைக் கண்டக்கால் -

என்றெல்லாம் பாடுகிறவளின் நெஞ்சிலே காதல், எரிமலைக்குள்ளே குமுறும் நெருப்பைப்போல் குமுறிக் கொண்டிருக்குமல்லவா ?

இத்தகைய காதல்-பெருக்கே 'நாச்சியார் திருமொழி' என்ற இவள் பிரபந்தமாக அருமையான தமிழ் மொழியில் வெளிப்பட்டிருக்கிறது. இவள், தான் கண்ட கனவைத் தோழிக்கு உரைக்கும் 'வாரணம் ஆயிரம்' என்று தொடங்கும் பாசுரங்கள் உலகில் இல்லாத புருஷோத்தமனைக் கோதை எப்படி மணந்து கொண்டாள் என்பதைத் தெரிவிக்கின்றன.

ஆயிரம் யானைகள் சூழ ஊர்வலமாக வந்து மணப்பந்தலுக்குள் பிரவேசிக்கிறான் புருஷோத்தமனான மாப்பிள்ளை. கோதை மணச்சேலை உடுத்து வருகிறாள். புருஷோத்தமன் இவள் கையைப் பிடித்துக்கொள்கிறான். இந்தப் பாணிக்கிரகணத்திலே, மணமக்கள் தீ வலம் வருகிறார்கள். அம்மி மிதித்தல் முதலான யாவும் நடைபெறுகின்றன. குங்குமம், சந்தனம் அணிந்து, ஊர்வலம் வந்து வீடுதிரும்பிய பின்பு, மணமக்கள் இருவரும் மஞ்சள்நீர் ஆடுகிறார்கள். இந்நிலையிலேதான் கோதை விழித்துக் கொள்கிறாள். 'நனவா, கனவா' என்று சிந்திக்கிறாள்.

'கனாக்கண்டேன் தோழி நான்' என்று அருகே இருந்த அருமைத் தோழியிடம் அந்த அற்புதமான கனவையும், அதிலே தான் அனுபவித்த ஆனந்தமான திருமண வைபவத்தையும் சொல்லத் தொடங்கினாள் :

மைத்துனன் நம்பி
மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக்
கனாக்கண்டேன் தோழீநான்!
செம்மை யுடைய
திருக்கையால் தாள்பற்றி
அம்மி மிதிக்கக்
கனாக்கண்டேன் தோழீநான்!
அங்கு அவ னோடும்
உடன்சென்று அங்கு ஆனைமேல்
மஞ்சனம் ஆட்டக்
கனாக்கண்டேன் தோழீநான்!

என்று கோதையே அந்தக் கல்யாண வைபவத்தை கூறியபின், காதலித்த புருஷோத்தமனை இவள் மணஞ்செய்து கொள்ளவில்லையென்று கருதுவதே நாஸ்திகம் என்று அபிப்பிராயப்பட்டது ஸ்ரீ வைஷ்ணவ பக்தியுள்ளம்.

'காதலர் மனங்கள் ஏற்கெனவே கலந்து விட்டன. மனம் கலந்தது மணம்தானே ?' என்று ரஸிகர்களும் கருதுவதில் தவறில்லை. ரஸிகர்களாகவும் பக்தர்களாகவும ஒருங்கே திகழ்ந்த ஸ்ரீ வைஷ்ணவ குரு பரம்பரை ஆசிரியர்கள், 'காவேரி சமுத்திரத்தோடு கலப்பதுபோல், கோதை புருஷோத்தமனும் அழகிய மணவாளனுமாகிய ஸ்ரீரங்கநாத

னைக் கைப்பிடித்து அவனோடு கலந்து விட்டாள்!' என்று உறுதி கூறுகிறார்கள்.

ஒருமகள் தன்னை உடையேன் ;
உலகம் நிறைந்த புகழால்
திருமகள் போல வளர்த்தேன் ;
செங்கண்மால் தான்கொண்டு போனான் !

என்று பெரியாழ்வாரும் சாட்சி சொல்லுகிறார், கோதையின் காதல்—மணத்திற்கு.

கோதை தன் உள் மனத்தின் ஆழத்திலே பரமாத்மாவைக் கண்டு புருஷோத்தமனாக வரித்துக் காதலித்தாள். இந்தக் காதல்-மணம், ஜீவாத்மா பரமாத்மாவோடு கலந்து கொள்வது தான். மாயையாகிய கருந்திரை விலகியதும், இருட்டறையாக இருந்த புறமனமும் ஒரே வெளிச்சமாகி விடுகிறது. திரைக்கப்பால் உள்ளத்தினுள்ளே ஒளி வீசிக்கொண்டிருந்த தீபமங்கள ஜோதியைக் கண்டு கொண்டாள் கோதை. இராக்கனவில் மட்டுமல்ல, கவிகளுக்குத் தோன்றும் பகல்-பொற்கனவிலும் கண்டு கொண்டாள் ; கண்டு கலந்து விட்டாள். இந்த லட்சியத்திற்காகக் கோதை எவ்வளவோ துன்பத்தை அனுபவித்தாள். உலகம் போற்றும் இன்பங்களைத் தியாகம் செய்தாள்.

எனது நண்பரொருவர்-உயர்ந்த லட்சியவாதி-வாழ்க்கையில் துன்பத்திற்கு மேல் துன்பத்தை அனுபவித்து வந்தார். "ஏனையா, அறிஞராகிய தாங்கள் கஷ்டப்படவேண்டும்?" என்று ஒரு கல்யாணப் பந்தலிலே அவரை நோக்கி ஒருவர் கேட்டார். அதற்கு அந்த நண்பர்,

உலகில் இல்லாதோர் கன்னியை
உளத்திடை மணந்தேன்,
அலகில் துன்பமாம் அலங்கலை(மாலையை)
எனக்குஅவள் அணிந்தாள்—

'உலகத்திலே இல்லாத ஒரு கன்னிகையைக் காதலித்து மணந்துகொள்ள ஆசைப் பட்டேன்; அவள் எனக்கு அணிந்த மணமாலைதான் இத்துன்பமெல்லாம்' என்று பதில் சொன்னார். ஆண்டாள் - கதையிலே ஊறிப்போன உள்ளம் அது. ஆண்டாள் என்ற கோதையும் உலகில் இல்லாத புருஷோத்தமனை உள்ளத்திடை மணந்து துன்பமாகிய மணமாலை சூட்டிக்கொண்டவள்தானே ? ஆனால் இத்தகைய துன்ப மணமாலை வாழ்க்கையை உண்மையில் இன்பமாக்கி விடுகிறது ; ஏன், பேரின்ப மயமாக்கி விடுகிறது.

ஒரு விஷயம்!

நாம் எவ்வளவோ விதங்களில் பணத்தைச் செலவு செய்கிறோம். ஆனால், மிகவும் உபயோகமுள்ள வழியில் செலவிடுவது அவசியம் அல்லவா ?

ஆம்—'பாரத மணி'க்கு ஒரு வருஷ சந்தாவைக் கட்டிவிடுங்கள். அதிகமில்லை, மூன்றே ரூபாய்தான்.

உங்கள் { அறிவு விருந்து / பொழுது போக்கு } சாதனம்

பிரபல எழுத்தாளர்கள் எழுதுகிறார்கள்
பல ரக விஷயங்கள் வாசக நேயர்களுக்கு வழங்கப்படுகின்றன
விளம்பரங்களுக்கு அரிய சாதனம்

சந்தா விவரம்:—

ஒரு வருஷத்துக்கு	3	0	0
ஆறு மாதத்துக்கு	1	8	0
தனிப் பிரதி விலை	0	4	0

பாரத மணி காரியாலயம்,
34, அலர்மேல்மங்காபுரம், மயிலாப்பூர், சென்னை.

மாதர் மகாநாடு

அமரகவி பாரதியாரின் கனவு இன்று நனவாகிவிட்டது. அவர் விரும்பிய சுதந்திரம் நமக்கு இன்று கிடைத்துவிட்டது. அவருடைய அகக்கண்ணில் தோன்றிய புதுமைப் பெண்கள் இன்று நம்நாட்டில் உலவுகின்றனர். சட்டங்கள் செய்வதும், பட்டங்கள் ஆள்வதும், இனிப் பாரினில் பெண்கள்தான் எனும் பேருண்மையை இன்று நிதர்சனமாகக் காண்கிறோம். இத்தகைய அரிய சந்தர்ப்பத்தை இம் மாதக் கடைசியில் காணலாம். நிற்க,

அகில இந்திய மாதர்சங்கத்தின் இருபதாவது மகாநாடு சென்னைமா நகரில் நடைபெறும். டிஸம்பர் மாதக்கடைசி வாரத்தில் நடைபெறும். இந்தியாவின் எல்லா பகுதிகளிலிருந்தும், அயல்நாடுகளிலிருந்தும், சிலோனிலிருந்தும் முன்னூறு பிரதிநிதிகள் வருகிறார்கள். அநேக அதிதிகளும் வருகிறார்கள். மகாநாடு தேனம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் பெரியபந்தலில் நடைபெறும். டிஸம்பர்மாதம் 29-ம் தேதி மாலை திறப்பு விழா. பிரதிநிதிகள் மேரி அரசிகலா சாலையில் தங்குகிறார்கள். இந்த விழாவை ஒட்டி ஏற்படுத்தும் கண்காட்சி 'லேடி வெலிங்க்டன் ஹைஸ்கூலி'ல் வைக்கப்படும். இதற்கு வரவேற்புக் கமிட்டியின் தலைவராக ஸ்ரீமதி. எஸ். அம்புஜம்மாள் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். மகாநாட்டிற்கு ஸ்ரீமதி. அனுசூயாபாய் அவர்கள் தலைமை வகிப்பார்கள்.

இம்மகா நாட்டில் முக்கியமான விஷயங்களையும், சுதந்திர இந்தியாவில் நமக்கு ஏற்பட்டிருக்கும் பொறுப்புகளைப் பற்றியும், அறிவிற் சிறந்த பல பிரமுகர்கள் பேசுவார்கள். ரசமான விவாதங்களும் நடைபெறும். முக்கியமானதும், சமூகத்திற்கு அவச்யமானதுமான பல தீர்மானங்கள் நிறைவேற்றப்படும்.

சுதந்திர இந்தியாவில் முதன்முதலாக இம்மகாநாட்டை நடத்தும் பாக்கியம் சென்னை நிலேஸ்தபானத்திற்குக் கிடைத்திருக்கிறது. விருந்தினரை உபசரிப்பதில் தமிழ்நாடு இணையற்றது, என்பது பிரசித்தமான விஷயம். இந்தச் சங்கத்தின் தலைவிகளும் மற்ற அங்கத்தினர்களும், இம்மாகாணத்திலுள்ள சகோதரர்கள் அனைவரையும் போஷகர்களாகவும், நன்கொடையாளர்களாகவும், வரவேற்புக் கமிட்டி அங்கத்தினர்களாகவும், சேர்ந்து ஒத்துழைத்து மகாநாட்டை வெற்றிகரமாக நடத்தி வைக்கும்படி வேண்டுகிறார்கள்; எனவே சர்க்காரையும், பத்திரிகைகளையும், மற்ற பொது மக்களையும் கேட்டுக் கொள்ளுகிறார்கள்.

கடந்த முப்பது வருஷங்களாக இந்த சங்கமானது ஜாதி, மத, நிறபேதமின்றி எல்லோரையும் ஒன்றுசேர்த்து, பெண்கள்: குழந்தைகள் இவர்களது முன்னேற்றத்திற்காகவும், ஒற்றுமை, சமாதானம் இவற்றையே ஆதாரமாகக் கொண்ட ஒரு ஜனநாயக இந்தியாவை ஏற்படுத்தவும் பாடுபட்டு வருகிறது.

தற்சமயம் இருக்கும் அகவிலையில், இந்த மகத்தான பொறுப்பை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. ஆகவே, நன்கொடை யனுப்புகிறவர்களை தயவு செய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பும்படிக் கேட்டுக் கொள்ளுகிறார்கள். அனைவரும் வந்திருந்து ஒற்றுமையுடன் இம்மகாநாட்டை நடத்தி வைக்கும்படியாக கௌரவ காரியதரிசிகள், ஸ்ரீமதி. சாவித்திரி ராஜன் அவர்களும், ஸ்ரீமதி. சரோஜினி வரதப்பன் அவர்களும், ஸ்ரீமதி பாரிஜாதம் நாயுடு அவர்களும், வரவேற்புக்கமிட்டித் தலைவர் ஸ்ரீமதி. அம்புஜம்மாள் அவர்களும் கேட்டுக்கொள்கிறார்கள்.

மகாநாட்டைப் பற்றிய விவரம் அறிய அவலுள்ளவர்களும், நன்கொடையாளர்களும், "இந்திய மாதர் சங்கம் காரியாலயம், 96 - மேரு, மௌப்ரீஸ் ரோடு, ஆள்வார்பேட்டை, சென்னை." என்ற விலாசத்திற்கு அனுப்பவும்.

குமரகுருபர சுவாமிகள்

I

விசுவநாத தரிசனம்

ஒரு சமயம் குமரகுருபர சுவாமிகளைப் பார்த்து அவருடைய குரு, "நீ காசி யாத்திரை செய்துவந்தால் உனக்கு அனுக்கிரகம் செய்வோம்" என்று சொன்னாராம். அந்த நாளில் காசியாத்திரை செய்வது மிகவும் கஷ்டமாயிருந்தது. அந்த யாத்திரையை முடித்துக் கொண்டு க்ஷேமமாகத் திரும்பி வருவதே சந்தேகம்தான்! எனவே, சீடர் வேண்டுகோளைப் புனராலோசனை செய்து, குரு அனுக்கிரகத்தோடு அந்த யாத்திரை செய்வதற்கு முன்னமே ஞானோபதேசம் செய்தார். இப்படிக் காசியாத்திரை கொஞ்சகாலம் தடைப்பட்டதால், அதைக் குறித்த ஆசை குமரகுருபரருள்ளத்திலே வளர்ந்து வந்தது. தாம் குருவின் இருப்பிடமான காவேரி தீரத்திலிருந்தபோதிலும், உள்ளம் தமக்கு முன்னே ஓடிப்போய்க் கங்கா தீரத்தை அடைந்துவிட்டதாகவே உணர்ந்தார்.

ஞானோபதேசத்திற்குப் பின் குரு மறுபடியும் காசியாத்திரையை வற்புறுத்தியதும், குமரகுருபரர் உடனே புறப்பட்டுச் சிதம்பரம் காஞ்சிபுரம் காளத்தி முதலிய ஸ்தலங்களைத் தரிசித்துக் கொண்டே மெள்ள மெள்ளக் காசியை அடைந்தார். ஆனால் வழியெல்லாம் தம்முடைய ஒரே லட்சியம்தான் ஞாபகத்தில் இருந்தது. அவர் தரிசித்துக் கொண்டே போன ஸ்தலங்களெல்லாம் பல வேறு ஸ்தலங்களாகத் தெரியாமல் காசி யென்ற ஒரே ஸ்தலமாகவே தோன்றினவாம். அந்தந்த ஸ்தலங்களிலே கோயில் கொண்டிருந்த மூர்த்திகளும் நடராஜாவாகவும் ஏகாம்பரராகவும் காளத்தி நாதராகவும் தெரியவில்லையாம்; காசிவிசுவநாதராகவே தரிசனம் கொடுத்தார்களாம். கண்ட கண்ட நதிகளெல்லாம்—சிற்றாறுகளும் உபநதிகளும்கூட—கங்கா தீர்த்தமாகவே காணப்பட்டனவாம். எனினும் உள்ளம் திருப்தி அடையவில்லை. அது வடக்கே, வடக்கே ஆகர்ஷித்துக் கொண்டுபோய்க் குமரகுருபரரைக் கடைசியாகக் கங்கைக் கரையிலே நிறுத்தி விட்டது.

குமரகுருபர சுவாமிகள் குதூகலமாய்க் கங்கா ஸ்நானம் செய்து பரபரப்பாகப் போய் விசுவநாதரைத் தரிசனம் செய்யும்போது, பழைய ஞாபகங்களும் அனுபவங்களும் பாய்ந்து வந்தன அலை அலையாக. சிவபெருமான் கோயில் கொண்டிருக்கும் திருப்பதிகளெல்லாம் தம்மைப் போல் எப்படியோ அந்த ஸ்தலத்திற்கு வந்து விட்டதாகத் தோன்றிற்று! அங்கங்கே யுள்ள மூர்த்திகளெல்லாம் தம்மைப்போல் விசுவநாதரைத் தேடிவந்து அந்த ஸ்வரூபத்தில் லயித்து விட்டதாகத் தோன்றியது! தாம் தாண்டி வந்த நதிகளும், கடலிலோ வேறு நதிகளிலோ கலப்பதற்கு மாறாகத் தம்மோடு வடக்கு நோக்கி ஓடிவந்து கங்கையில் கலந்து விட்டதாகத் தோன்றியது! இப்படிப்பட்ட பக்தி யனுபவத்தைப் பாடுகிறார் குமரகுருபரர், விசுவநாதரைக் கும்பிட்டுக் கொண்டே :—

> காணும் காணும் நதிகளெல் லாம்புனற்
> கங்கையே! அங் குளதெய்வம் யாவையும்
> தாணு, எங்கள் அகிலேசரே! மற்றைத்
> தலங்கள் யாவும் தடமதிற் காசியே!
>
> —(காசிக்கலம்பகம்)

[புனற்கங்கை—புனல்+கங்கை—குளிர்ந்த நீரையுடைய கங்கை. அகிலேசர்—விசுவநாதர். தடமதில்—பெரிய மதில்.]

இந்தியாவிலே மிகச் சிறந்த புண்ணிய க்ஷேத்திர மென்று கருதப்படும் காசியையும், தெய்வநதி யென்று கொண்டாடப் படும் கங்கையையும், "அகிலலோக

நாயகன்" என்று பொருள்படும் பேரோடு கூடிய விசுவநாதரையும் குறித்துப் பாடிய இந்த செய்யுட் பகுதியில், "திருப்பனந்தாள் காசி மடாலயம் குமாரகுருபர சுவாமிகள்" என்று பின்னளிலே பிரசித்தி பெற்ற இவர் எவ்வளவு ஆவலோடும் பக்தி யுணர்ச்சியோடும் தமது முதலாவது காசியாத்திரையைப் பூர்த்தி செய்திருப்பார் என்ற சரிதக் குறிப்பு ஒருவாறு காணப்படுகிறது.

II

'விஷ அமுது'

சிவ பெருமான் விஷபானம் செய்து தேவர்களைக் காப்பாற்றிய புராணக்கதை உலகத்திலுள்ள - பொருள் பொதிந்த- சிரஞ்சீவிக் கதைகளில் ஒன்று. உண்மையில், இது ஒரு தனிக் கதையன்று : தேவர்களும் பிறரும் விஷ்ணுவின் உதவியோடு அமிர்தம் பெறுவதற்காகக் கடலைக் கடைந்த பழம்பெருங்கதையின் ஒரு முக்கியமான பகுதிதான் இந்தச் சிவ கதையும்.

அமிர்தம் பிறந்த அந்தப் பாற்கடலிலே தான் விஷமும் பிறந்தது;-ஆம்,, சிதேவி பிறந்த அதே கடலில் மூதேவியும் பிறந்தது போல! ஒளி-இருள், பாவம்-புண்ணியம் முதலான இரட்டைகளுக்குள்ளேயிருக்கும் உறவின் தத்துவத்தை இந்தக் கதையும் ஒருவாறு சுட்டிக் காட்டுகிறதல்லவா?

தேவாசுரர்கள் நாக்கிலே நீர் ஊற எவ்வளவு உற்சாகமாகக் கடைந்தார்கள் என்பதற்கு அந்த அலைகளே சாட்சி! ஆனல் அந்த அலைகடலிலிருந்து இப்போது புறப்படுகிறது விஷம்,—கொடிய ஆலகால விஷம்,-பிரளயகால நெருப்பைப் போலே! இதைக் கண்ட தேவர்கள், "கடவுளே! சரணம்" என்று முறையிட்டுக் கொண்டதும், சிவ பெருமான் விஷபானம் செய்து உயிர்ப் பிச்சை கொடுக்கிறர் என்பதைச் சிவ நேசச் செல்வரான குமாரகுருபரசுவாமி

அல்லயன்ஸ்

அரிய நூல்கள்

		ரூ. அ.
1.	கதைக் கோவை — 4	10 8
2.	ஷை 3	7 8
3.	ஷை 2	7 8
4.	புயல் — மகாகவி டாகூர்	5 0
5.	அம்பலவாணன் — 1, 2	4 0
6.	என் சரிதம் — காந்திஜி	3 8
7.	தலைவர் ஜவாஹர்	3 8
8.	கற்புக் கனல்	3 8
9.	கன்யாகுமாரி	2 8
10.	வழிகாட்டி	2 8
11.	மல்லிகை மாலை	2 8
12.	உரிமையும் கடமையும்	2 8
13.	மிருணுளினி — பங்கிம்	2 8
14.	கதைக்கொடி	2 8
15.	தாவரங்களின் இல்லறம் (படங்களுடன்)—ராஜாஜி	2 0
16.	சிசு பாலனம்	0 8
17.	புது வழி — நேதாஜி	2 0
18.	இளைஞன் கனவு ,,	2 0
19.	கல்லின் வேட்கை — டாகூர்	2 0
20.	காட்டேர் ராமு — நாவல்	2 0
21.	பெரியாழ்வார் — பி.ஸ்ரீ.	3 0
22.	விமோசனம்	1 4
23.	தீப ஒளி	2 8

ராஜாஜி

விரிவான சரித்திரம்-படங்களுடன்

ஸ்ரீ நாரண துரைக்கண்ணன்

எழுதியது (அச்சில்)

குறிப்பு: ராஜாஜி அவர்களின் 70-ம் ஜன்ம விழாவை முன்னிட்டு, 10-12-47 முதல் 9-1-48 வரை எங்கள் வெளியீடுகள் யாவும் ரூபாய்க்கு 2 அணு கமிஷன் தள்ளித் தரப்படும்.

எங்கள் புதுவருஷக் காலண்டர் பத்து ரூபாய்க்குமேல் புத்தகங்கள் ஆர்டர் செய்வோர்க்கு இனமாகவும், ஏனையோருக்கு பத்தணு வீதமும் அனுப்பப்படும். (10 அணுவுக்கு மணியார்டர் அனுப்பவேண்டும். தபால்தலைகள் ஏற்றுக்கொள்ளோம்.)

அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை-4

கள், பின்வரும் அடிகளில் எவ்வளவு பக்தி விசுவாசத்தோடு, எவ்வளவு உற்சாகமாக எடுத்துரைக்கிறார் ?

புலவரும் 'அடிகள் ! ஓர்
புகல்' எனமுறையிட
அலைகடல் விடம்முனம்
அமுதசெய் தருளினை !

[புலவர்—தேவர்கள். அடிகள்—கடவுளே. ஓர்—ஒரு. புகல்—சரணம். விடம்—விஷம். முனம்—முன்னம்.]

தேவர்கள் முறையிட்டுக் கொண்ட பின், சிவபெருமான் தேவியை நோக்கி, "பிறருக்காகத் தியாகம் செய்ய வேண்டியது அவசிய மென்பதை முன்னமே ரிஷிகளுக்கு உபதேசித்திருக்கிறோம். அந்த உபதேசத்தை இப்போது நாமே அனுஷ்டித்துக் காட்ட விரும்புகிறோம்" என்று சொன்னதாகப் புராணம் சொல்லுகிறது.

தம்முடைய தியாகத்தைக் குறித்து ஒரு பிரஸ்தாபமும் செய்யாமலே அந்தத் தியாகமூர்த்தி ஓடி வந்து அருள் செய்ததாகச் சொல்லுகிறார் இங்கே. அந்த ஆத்திரமும், தேவர்கள் ஓடிவந்து முறையிட்ட ஆத்திரமும், குமரகுருபரரின் செய்யுளடியில் எப்படித் தொனிக்கின்றன, பாருங்கள் !

—

பிணியாளர்களுக்கோர் தேறுதல்

மேல் நாட்டு மருந்துகளாலும் ஏனைய நம் நாட்டு மருந்துகளாலும் குணமடையாதிருக்கும் "குஷ்டம்" "படை" "மேகப்பற்று" முதலான சரும வியாதிகளுக்கு எமது

கந்தகராஜ ரஸாயனம்

உறுதியான பலனைக் கொடுக்கிறது

பவுண்டு விலை ரூ. 60—0—0

வாத வியாதி, மாதவிடாய் சம்பந்தமான கோளாறுகள் முதலான எவ்வித நோய்களையும் எமது மூலிகைகளால் செய்யப்பட்ட ஔடதங்கள் கண்டிக்கின்றன.

முழு விபரங்களுக்கு :

அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதுங்கள் :

மானேஜர்,
ஆர்ய வைத்தியசாலை,
கோட்டைக்கல், தென் மலையாளம்

மாய மீன்

பல வருஷங்களுக்கு முன் ஒரு அரசன் இருந்தான். அவன் பெயர் சத்திய விரதன். அவன் ரொம்ப நல்லவன். சின்னஞ்சிறு குருவியிடமும் அவனுக்கு அன்பு உண்டு. ஒருவருக்கும் கொஞ்சமும் கஷ்டம் கொடுப்பதைச் சகிக்கமாட்டான். இந்த உலகத்தை உண்டாக்கிய பிரம்மாவுக்கு மிகவும் களைப்பாயிருந்தது அதனால் ஒரே தூக்கம் போட்டார். இந்தச் சமயம் பார்த்து ஒரு ராக்ஷஸன் மெதுவாய் ஏதாவது விஷமம் செய்யப் பார்த்தான். பிரளயத்தை உண்டாக்கிப் பூமியையே முழுக அடித்துவிட ஏற்பாடு செய்தான்.

இப்படியிருக்கும்போது ஒருநாள் சத்திய விரதன் என்னும் இந்த நல்ல ராஜா ஆற்றங்கரை வழியாய் நடந்து போய்க் கொண்டிருந்தான். சலசல வென்று ஓடும் ஆற்றையும் அழகான பூஞ்சோலையையும் பார்த்துக் கொண்டே போனான்.

ஆற்றங்கரையில் நின்றுகொண்டு ஜலத்தை எடுத்து இறைத்து விளையாடிக் கொண்டிருந்தான். ஒருதடவை இரண்டு கைகளாலும் தண்ணீரை எடுக்கும் போது அதில் ஒரு சிறு மீன்குஞ்சு இருந்தது. சத்தியவிரதன் அதைப் பார்த்து "ஐயோ பாவம்! மறுபடி உன்னை உன்னுடைய ஆற்றிலேயே விட்டுவிடுகிறேன். உன் அம்மாவிடம் போய்ச் சந்தோஷமாய்த் துள்ளிக் குதித்து விளையாடிக் கொண்டு இரு" என்று சொன்னான். மெதுவாய் அந்தக் குட்டிமீன் குஞ்சை ஆற்றில் விடுவதற்காகக் குனிந்தான்.

பாப்பா! அந்தச் சின்ன மீன்குஞ்சு என்னசெய்தது தெரியுமா? "ஏ ராஜா ராஜா! என்னை இந்த ஆற்றிலே மறுபடியும் போடாதே. என்னால் இந்த ஆற்று வெள்ளத்தின் வேகத்திலே மூச்சுக்கூட விடமுடியவில்லை. என் அம்மா, அப்பா எல்லாரும் எங்கே போனார்களோ தெரியவில்லையே. அதோபார் ஒரு பெரிய மீன் வருகிறதே! அதைப் பார்த்தாலே எனக்குப் பயமாய் இருக்கிறது. நான் எவ்வளவு சின்னக் குட்டியாயிருக்கிறேன் பார்த்தாயா? அது என்னை ஒரே நிமிஷத்தில் விழுங்கிவிடும். அதனால் நீதான் என்னைக்காப்பாற்ற வேண்டும" என்று சொல்லிற்று.

இந்த ராஜா நல்ல ராஜா தானே. அதனால் அவன், "சரி மீன்குஞ்சே! நான் உன்னை என் அரண்மனைக்கு எடுத்துக் கொண்டுபோய் ஜாக்கிரதையாய் உனக்குச் சரியான ஏற்பாடு செய்து வளர்க்கிறேன். அங்கே உன்னை யாரும் ஒன்றுமே செய்யமாட்டார்கள். நீ உன் இஷ்டம்போல் தைரியமாய்த் துள்ளி விளையாடலாம். பயப்படாதே!" என்று அதை தன் அரண்மனைக்கு எடுத்துக் கொண்டு போனான். அங்கே அவன் ஒரு பெரிய பாத்திரத்தில் ஜலத்தை விட்டுச் சில செடி கொடிகளையும் போட்டு அதில் மெதுவாய் இந்த மீன் குட்டியை விட்டான்.

மறுநாள் காலையில் எழுந்ததும் தான் கொண்டுவந்த மீன்குஞ்சைப் பார்க்க வந்தான். அந்த மீன்குஞ்சு ஒரே ராத்திரியில் அந்தப் பாத்திரத்திற்குச் சரியாய் வளர்ந்துவிட்டது. சத்திய விரதராஜா அதைப் பார்த்து, "இது என்ன ஆச்சரியமாய் இருக்கிறதே! நீ எப்படி இருக்கிறாய்?" என்று கேட்டான். அந்த மீன், "இந்த இடத்தில் என்னால் இருக்க முடியாது. வேறு எங்கே

யாவது என்னைக் கொண்டு போய்விடு.” என்றது.

ராஜா அதைக்கேட்டு அதைக்கொண்டு போய் ஒரு பெரிய தொட்டியில் விட்டான். பிறகு சாப்பாடு ஆனதும் வந்து பார்த்தால், அது தொட்டிக்குச் சரியாய் வளர்ந்துவிட்டது. அந்த மாய மீன் ராஜாவைப் பார்த்து, “ இந்த இடத்தில் என்னால் வசிக்க முடியாது. கஷ்டமாய் இருக்கிறது. வேறு எங்கேயாவது போய்த்தான் ஆகவேண்டும் ” என்று கட்டளையிட்டது. ராஜா பார்த்தான்; அதைக் கொண்டு போய்ப் பெரிய ஏரியில் விட்டான்.

மறுநாள் அவனுக்கே இந்த மாய மீன் என்ன செய்கிறதென்று பார்க்கத் தோன்றிற்று. ஏரிக்குப் போய்ப் பார்த்தான். அங்கே அந்த மீன் ஏரிக்குச் சரியாய் வளர்ந்து விட்டது. உடனே ராஜா, “ இனிமேல் இங்கே சரிப்படாது. ஸமுத்திரம்தான் சரியான இடம்” என்று அங்கே கொண்டுபோய் அதை விட்டான். அந்தப் பொல்லாத மாயமீன் ராஜாவைப் பார்த்து, “ ஏ ராஜா, நீ என்னை இங்கே விட்டு விட்டுப் போகாதே. இங்கே திமிங்கலம் எல்லாம் என்னைத் தின்று விடுமே. நான் என்ன செய்வேன் !” என்றது.

அப்போது ராஜா அதை அன்புடன் பார்த்து, “ மீன் வேஷம் போட்டுக் கொண்டு என்னை ஏமாற்றிக் கொண்டே வருகிறாயே, நீ யார் ? உலகத்தையே உண்டாக்கிய கடவுளாய்த் தான் இருக்க வேண்டும் ” என்றான்.

அப்போது அந்த மாயமீன், “ ஆமாம் நான் உன் கருணையைச் சோதிப்பதற்குத் தான் வந்தேன். அதிருக்கட்டும். இன்னம் ஏழுநாட்களில் பிரளயம் உண்டாகிச் சமுத்திரம் பொங்கி உலகத்தையே முழுக அடித்துவிடப்போகிறது. ஆனால் அதிலிருந்து நான் உன்னைக் காப்பாற்றப் போகிறேன். அப்போது ஒரு படகை அனுப்புவேன். நீ அதில் உலகத்தில் உள்ள மரம், செடி, மிருகங்கள் ஒவ்வொன்றிலும் ஒன்று எடுத்துக் கொண்டு இன்னம் ஏழு பேர்களுடன் ஏறிக்கொள். அந்தப்படகு ஆடாதபடி என்னுடைய இந்த ஒற்றைக் கொம்பில் கட்டிவிடு ” என்று சொல்லிற்று.

அதே போல ஏழு நாட்களுக்குப் பின் கடல்கொந்தளித்துப்பொங்கியது. எங்கு பார்த்தாலும் இடியும் மின்னலுமாய் இருந்தது. சத்திய விரதன் அந்த மாய மீன் சொன்னபடி ஏற்பாடு செய்து காத்துக் கொண்டிருந்தான்.

அந்த மாயமீன் ஒரே தங்கமயமாய் வந்தது. ராஜா அங்கே வந்த கப்பலில் தான் கொண்டுவந்த செடி, கொடி மிருகங்கள் மனிதர்களுடன் ஏறிக் கொண்டான். அது சொன்னபடியே அந்த மீனுடைய கொம்பில் அந்தப் படகைக் கட்டினான். பூமி முழுவதும் ஒரே வெள்ளமாய் விட்டது. சில நாட்களில் வெள்ளம் தணிந்தது. பூமி முன் போல் ஆயிற்று. எல்லோரும் ஸந்தோஷமாய் இருந்தார்கள் பாப்பா ! இந்த ராஜா நல்ல ராஜாதானே ?